இதழ் 324
01 பெப்ரவரி 2025
18 பக்கங்கள்
இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER
SUBSCRIBE US! youtube.com/@IlakkuWeb2.0
LIKE US! facebook.com/ilakku.ilakku.10
FOLLOW US! twitter.com/Ilakku1



# ஈழத்தமிழினத்தின் 77வது கரிநாள் பெப்ரவரி 04

பா.அரியநேத்திரன்

# சிலிக்கன் வலிக்குள் சீனா வீசிய அணுக்குண்டு



வேல்ஸில் இருந்து அருஸ்

# அமெரிக்காவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்திய டீப்சீக் (Deepseek) செயற்கை நுண்ணறிவுச் செயலி

தமிழில்: ஜெயந்திரன்

info@ilakku.org

© 2025 இலக்கு இணையம்

## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராஜா காலமானார்



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்தத் தலைவரும், நாடாளு மன்ற முன்னாள் உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தனது 82வது வயதில் காலமாகியுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் கடந்த புதன்கிழமை காலமாகியுள்ளார்.

அவரது மறைவுக்கு ஜனாதிபதி,பிரதமர்,அரசியல் தலைவர்கள், பொது மக்கள் என அனைவரும் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக 2014ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டு 2024ம் ஆண்டு வரை அதன் தலைவ ராக செயல்பட்ட மாவை சேனாதிராஜா, இலங்கை தமிழ் தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டில் 1961ம் ஆண்டு நடைபெற்ற சத்தியாகிரக போராட்டத்தில் இணைந்துக் கொண்டதன் ஊடாக, தனது போராட்ட மற்றும் அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பயணிகள் விமானத்துடன் மோதிய உலங்குவானூர்தி - விபத்தா?



அமெரிக்காவின் வொசிங்டன் பகுதியில் உள்ள ரொனால்ட் ரீகன் தேசிய விமானநிலையத்திற்கு அண்மையாக 64 பயணிகளுடன் பயணித்த பயணிகள் விமானத்துடன் அமெரிக்க இராணுவத்தின் பிளக் ஹெவ்க் எச்-60 என்ற உலங்குவார்தி புதன்கிழமை(29) இரவு நேருக்கு நேர் மோதியதால் விமானம் ஆற்றில் வீழந்துள்ளது.அதில்இருந்தபயணிகள்அனைவரும் கொல்லப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கன் எயர்லைனுக்கு சொந்தமான சிறிய பி.எஸ்.ஏ நிறுவனத்தின் Bombardier CRJ700 என்ற பயணிகள்விமானத்தில் 60 பயணிகளும், 4 பணியாளர்களும் பயணம் செய்ததாகவும், உலங்குவானுர்தியில் 3 இராணுவத்தினர் பயணித்ததாகவும் அமெரிக்க தகவல்கள் தெரிவித்துள்ளன. உலங்குவானூர்தி அதிக சேதத்தை சந்திக்காதபோதும் விமானம் முற்றாக அழிந்துள்ளது.

நிலமைகளை தாம் உன்னிப்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

## இனவாதிகளுக்கு எதிராக கடுமையான சட்டத்தை அமுல்படுத்துவோம்: ஜனாதிபதி



தெற்கில் இனவாதத்தை தோற்றுவிக்க ஒருதரப்பினர் முயற்சிக்கின்றனர். ஆனால், நாம் இந்த நாட்டில் மீண்டும் இனவாதத்தை தோற்றுவிக்க ஒரு போதும் இடமளிக்க மாட்டோம். இனவாதிகளுக்கு எதிராக கடுமையாக சட்டத்தை அமுல்படுத்துவோம் எனஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ். வல்வெட்டித்துறையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி,''வடக்கு மக்கள் கடந்த இரண்டு பிரதான தேர்தல்களின் போதும் தேசிய மக்கள் சக்திக்கு அளித்த வாக்குகள் வெறுமனே ஒரு அரசாங்கத்தை அமைப்பதற்கான புள்ளடி மாத்திரம் அல்ல. மாறாக அவை இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைவதற்கு வழங்கிய வாக்குகளாகும்.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## கனடாவின் தேர்தலில் இந்தியா தலையிடுவதாக குற்றச்சாட்டு



தனக்கு சார்பான ஆட்சி முறை ஒன்றை கொண்டு வரும் நோக்கத்துடன் கனடாவின் தேர்தலில் இந்தியா அதிக தலையீடுகளை மேற்கொள்வதாகவும், அரசியல்வாதிகளை இந்தியா தனக்கு சார்பாக மாற்ற முற்படுவதாகவும் கனடா முன்வைத்தக் குற்றச்சாட்டுக்களை இந்தியா மறுத்துள்ளது.

முகவர்களின் ஊடாக கனடாவின் அரசியலில் இந்தியா மறைமுகமாக தலையிட்டுவருகின்றது. கனடாவில் உள்ள பல அரசியல்வாதிகளுக்கு இந்தியா நிதி உதவிகளை வழங்கி அவர்களை இந்தியாவுக்கு சார்பானவர்களாக மாற்ற முற்பட்டுவருகின்றது என கனடாவின் பிரதமர் ஜஸ்ரின் ரூடோவினால் அமைக்கப்பட்ட மரி ஜோசி ஹொக்

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

## ஆபிரிக்க பொருளாதாரக் கூட்டமைப்பில் இருந்து விலகும் நாடுகள்



ஆபிரிக்காவில் ஏற்பட்டுவரும் பூகோள அரசியல் மாற்றங்கள் அங்கு பல சம்பவங்களைத் தோற்றுவித்து வருகின்றது. அண்மையில் தமது மண்ணில் இருந்து அமெரிக்க மற்றும் பிரான்ஸ் படையினரை வெளியேற்றி மேற்கு ஆபிரிக்க நாடுகள் தற்போது *The Economic Community of West African States (ECOWAS)* எனப்படும் மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதாரக் கூட்டமைப்பில் இருந்தும் விலகியுள்ளன.

சாகேல் நாடுகளுடன் ஏற்பட்ட கருத்துவேறுபாடுகள் காரணமாக நைகர், மாலி மற்றும் பேர் கினோ பசோ ஆகிய

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## பெருகிக்கிடக்கும் போதைப்பொருள் பயன்பாடு– ரவிகரன் எம்.பி



வடபகுதி எங்கும் விடுதலைப் புலிகளின் காலத்தில் இல்லாத போதைப்பொருட்கள் தற்போது பன்மடங்கு பெருகிக் காணப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியதுடன், இவ்வாறு பெருகிக்காணப்படும் போதைப் பொருட்களைக் கட்டுப்படுத்த கடுமையான நடவடிக்கைகள் தேவை எனவும் வலியுறுத்தியுள்ளர்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் கருத்து தெரிவிக்கையில், ''தற்போது முல்லைத்தீவு மாவட்டம் உட்படட வடபகுதி எங்கும் போதைப்பொருட்கள் பெருகிக் காணப்படுகின்றன. போதைப் பொருட்கள் என்னும்போது கசிப்பு, கஞ்சா என்பவற்றைத் தாண்டியும் இன்னும் புதுவிதமான பல போதைப்பொருட்கள் எமது பகுதிகளில் பெருகிவருவதாக மக்கள் எம்மிடம் முறையிடுகின்றனர்.

விடுதலைப்புலிகளின்காலத்தில்இவ்வாறானபோதைப்பொருட்கள் எவையும் இல்லை. ஆனால் தற்போது எமது பகுதிகளில் போதைப்பொருள் பலமடங்கு பெருகிக் காணப்படுகின்றன. யுத்தம் மௌனிக்கப்பட்ட பிற்பாடு, கடந்தகால அரசாங்கங்கள் எமது தமிழ்மக்களை அழிக்கும் நோக்கில் இந்த போதைப்பொருள் பாவனையை எமது பகுதிகளில் ஊடுருவச்செய்து வேடிக்கைபார்த்த னர்.

தற்போதும் பெரியோர் முதல் இளையோர்வரை போதைப் பொருள் பாவனைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். தற்போதைய அரசதரப்பு பிரதிநிதிகளிடம் எமது பகுதிகளில்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## அமெரிக்காவின் நிதி உதவியில் இயங்கும் உக்ரைனின் ஊடகத்துறை



உக்ரைனின் ஊடகத்துறைக்கு தேவையான நிதியின் 90 விகிதமானவை மேற்குலகத்தினால் வழங்கப்படுவதாகவும், அமெரிக்காவின் யுஎஸ் எயிட் எனப்படும் அமைப்பு 80 விகிதமான நிதியை வழங்கி வந்ததாகவும் *The Institute of Mass Information* என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் தலைவர் ஒக்சானா றொமான்யுக் புதன் கிழமை(29) தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு ரஸ்யாவுடன் போர் ஆரம்பமாகிய பின்னர் உக்ரைன் ஊடகங்களுக்கான விளம்பர வருமானம் 90 விகிதத்தால் வீழ்ச்சி கண்டிருந்தது. எனவே பல ஊடகங்கள் வெளிநாடுகளில் உதவிபெறும் நிலைக்கு தள்ளப்பட்டன. சில ஊடகங்கள் 100

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

## ஜனாதிபதியிடம் 20 கோரிக்கைகளை முன்வைத்த கஜேந்திரகுமார் நா.உ



ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க தலைமையில் நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பல்வேறு கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தார்.

***அவை,***

***1. யாழ். போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதி உடனடியாக அமைக்கப்படல் வேண்டும்.***

***2. யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள நோயாளர் விடுதிகள் அதிகளவான நோயாளர்களால் நிரம்பி வழிகிறது. பல விடுதிகளில் கட்டில்கள் பற்றாக்குறை காரணமாக அவ்வப்போது நோயாளர்கள் தரையிலும் இரவு முழுவதும் கதிரைகளில் அமர்ந்தவாறும் ஒரு கட்டிலில் இரண்டு நோயாளர்கள் என உறங்கவேண்டிய நிலைமைகள் காணப்படுகின்றன. நோயாளிகளைப் பராமரிப்பதற்காக உடனிருப்பவர்கள் பல மணிநேரமாக நின்ற நிலையிலேயே பராமரிப்பு பணிகளில் ஈடுபட வேண்டிய நிலையில் உள்ளனர். இந்நிலை உடனடியாக சீர் செய்யப்பட வேண்டும்.***

***3. யாழ். பண்ணையில்அமைந்துள்ள மார்பக சிகிச்சை(காச நோய்) பிரிவில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும். மயிலிட்டியில் அமைந்திருந்த காசநோய் பிரிவை அந்த இடத்தில் மீளவும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.***

***மயிலிட்டியில் இயங்கிய காசநோய் வைத்திய சாலை தற்காலிகமாக கோப்பாய் பிரதேச வைத்திய சாலையில் இயங்குகிறது. ஆனாலும் அங்கு அந்த அலகுக்கான ஆளணிகள் எதுவும் நியமிக்கப்படவில்லை. உடனடியாக ஆளணி நியமனம் செய்யப்பட வேண்டும்.***

***பண்ணையில் உள்ள மார்பக சிகிச்சை நிலையத்துக்கென நிரந்தரமான எக்ஸ்ரே றேடியோ கிறாபர் (x-ray radiographer) இல்லை. அவர்களை நிரந்தரமாக நியமிக்கப்பட வேண்டும். (தற்போது திங்கள், புதன் ஆகிய இரண்டு நாட்கள் மட்டும்)***

***இவ்வைத்தியசாலையில் பரிசோதனைக்காக பெறப்படும் சளி மாதிரிகளை பாதுகாப்பாக களஞ்சியப் படுத்துவதற்கான குளிர்சாதனப் பெட்டிகள் பெரும் பற்றாக்குறையாக உள்ளது. பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகள் ஐந்து நாட்களுக்குள் சோதனை செய்யப்பட வேண்டும். ஆனால், உரிய கருவிகள் இன்மையால் ஒரு வருடத்துக்கும் மேலாக சேமிப்பில் உள்ள நிலை காணப்படுகிறது. இந்நிலை சீர் செய்யப்பட வேண்டும்.***

***4. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பெருமளவான இளையோர் போதைப்பொருள் பயன்பாட்டுக்கு அடிமையாகி வருகின்றனர். அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வளித்து, அவர்களை மீட்டெடுப்பதற்கான புனர்வாழ்வு நிலையம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அமைக்கப்பட வேண்டும்.***

***5. யாழ். மாவட்டத்தில் கடற்றொழில் படகுகளை***

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## ஈழத்தமிழர் இறைமை நீக்கத்தை "அனைவரும் தேச மறுமலர்ச்சிக்காக இணைவோமென" 77வது சுதந்திர நாளாக முன்னெடுக்கும் சிறிலங்கா

சிறிலங்காவின் அரசத்தலைவர் அநுர குமர திசநாயக்காவின் இவ்வார யாழ்ப்பாண வருகையின் பொழுது வல்வெட்டித்துறையில் கூறியுள்ள "நாம் ஒன்றிணைந்து இந்த நாட்டைக் கட்டியெழுப்புவோம். கடந்த காலங்களில் இனவாதத்தைப் பயன்படுத்தி அரசியல்வாதிகள் ஆட்சிக்கு வந்தார்கள். நாட்டில் இனவாதம் மதவாதம் தோன்ற ஒருபொழுதும் அனுமதிக்க மாட்டோம். இனவாதத்தைக் கையில் எடுக்கும் தரப்பினர்க்கு எதிராகக் கடுமையான சட்டத்தை நாம் நடைமுறைப்படுத்துவோம்." என்ற பேச்சு கேட்கும் பொழுது எந்தத் தமிழருக்கும் உற்சாகம் தருகிறது. அவரது ஆட்சியில் நடக்க இருக்கும் முதலாவது சிறிலங்காவின் சுதந்திர நாளுக்கான "அனைவரும் தேச மறுமலர்ச்சிக்காக இணைவோம்" என்னும் அழைப்பும் மேலெழுந்தவராரியாகப் பார்த்தால் மகிழ்ச்சி தரும் மொழிகள்தான். ஆனால் அடிப்படையில் சிங்களப் பெரும்பான்மை ஆட்சி தன்னை ஈழத்தமிழின அழிப்பு மூலம் ஈழத்தமிழர் தாயக மண்ணில் படைபலத்தால் நிறுவிக் கொண்ட பின்னணியில் அந்த ஆட்சியில் யாரும் இனஉரிமை கேட்டால் அந்த இனவாதம் ஏற்படாதவாறு அந்த ஆட்சியில் அனைவரும் இணைந்து பெரும் சமுகத்துடன் ஒன்றாதல் வேண்டும் என்பதற்கான அழைப்பாகவே இவை உள்ளன. அதாவது அனைவரும் என்பது சிறிலங்கன் என்கிற ஈழத்தமிழர் இறைமை ஒடுக்கமாகவும் இணைவோம் என்பது ஈழத்தமிழர் தேசிய ஒடுக்கமாகவும் உள்ளது என்பது தான் கவலைக்குரிய விடயம்.

அது மட்டுமல்ல வடக்கு, கிழக்கு என்று சிறிலங்காவின் மாகாணமாகவே அவர் ஈழத்தமிழர் தாயகத்தைப் பேசுவது தமிழர்கள் வாழும் பகுதிகள் அவை என்பதை ஏற்காத அப்பட்டமான பௌத்த சிங்கள பேரினவாதமாக உள்ளது. மேலும் மகிந்த சிந்தனையான சிறிலங்காவில் இனப்பிரச்சினை என்பது இல்லை., கோத்தபாயாவின் சிந்தனையான அதிகாரப் பரவலாக்கல் என்ற பேச்சுக்கே இடமில்லை, ரணிலின் சிந்தனையான சிறிலங்காவின் வடக்கு கிழக்கு. இவற்றை எல்லாம் உள்ளடக்கி அதனை விட ஒருபடி மேலாக இனி யாராவது தங்கள் இனம்சார் உரிமைக்குக் குரல் எழுப்பின் அதுவே இனவாதம் என்கிற வரைவிலக்கணத்தை, சிங்கள பௌத்த மேலாண்மைக்கான உத்தரவாதமாகவும், அது மட்டுமல்லாது அவ்வாறு எழுப்பப்டும் உரிமைக்குரல் சட்டத்தால் நசுக்கப்படும் என்கிற எச்சரிப்பாகவும் அநுரவின் சிந்தனை அமைகிறது. இப்பொழுது பயங்கரவாதத் தடைச் சட்டம் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் வரும்வரை அப்படியே தொடரும் என்பது எதற்காக என்பதை ஊகிக்கக் கூடியதாக உள்ளது.

மேலும் இவைகளின் பின்னணியில் பார்க்கும் போது "அனைவரும் தேச மறுமலர்ச்சிக்காக இணைவோமென" ஈழத்தமிழர் இறைமை நீக்கத்தையே 77வது சுதந்திர நாளாக முன்னெடுக்கும் சிறிலங்கா அரசாகவே அநுரவின் அரசும் செயற்படுகிறது என்பதையும் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும் என்பது இலக்கின் கருத்தாக உள்ளது.

"ஒவ்வொரு சமூகமும் அது பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதிகளில் தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரத்தைக் கொண்டிருக்க வகைசெய்தல். இலங்கையில் சுவிட்சுலாந்து போன்ற பல்லின மற்றும் பன்முகச் சமுதாயங்கள் வாழும் நாடுகளில் இருப்பது போல அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும். அம்மாகாணத்தில் ஒரு இனம் பெரும்பான்மை இனமாக இருந்தாலும் அதன் கருத்துக்களையும் நிலைப்பாடுகளையும் சிறுபான்மையினங்கள் மீது அவற்றின் நலன்களுக்கு பாதகமான முறையில் திணிப்பதை அதிகாரப் பரவலாக்கம் தடுக்கும்."என சிங்கள ஆய்வாளராகிய முனைவர் ஜெகான் பெரேரா "மாகாண ஆட்சிமுறையில் அதிகாரங்களைப் பகிர்தல்" என்னும் வீரகேசரியின் 29.01. 25ம் திகதிய ஆய்வுக்கட்டுரையில் தெரிவித்துள்ளார். "மாகாணசபைகள் வெறுமனே மத்திய அரசாங்கத்தினால் நிருவகிக்கப்படுவதற்கான பன் முகப்படுத்தப்பட்ட அமைப்பு அல்ல அரசியலமைப்பின் 13 வது திருத்தம் சனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட சபையாகவே மாகாணசபையை வெளிப்படுத்துகிறது. ஆதலால் அதற்குப் பொலிஸ் காணி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்." எனத் தனது கருத்தையும் முனைவர் ஜெகன் பெரேரா எடுத்துரைத்துள்ளார். இவை தமிழர்களுக்கான சிங்கள ஆய்வாளரான ஜெகன் பெரேராவின் தீர்வு அணுகுமுறை. இவரும் ஈழத்தமிழரின் இறைமையுள்ள வடக்கு கிழக்கு தாயகத்தை நிராகரித்து அதனை சிறிலங்காவின் நிர்வாக மாகாணங்களாகவே தாம் கொண்டுள்ள கருத்தை உறுதிப்படுத்துகிறார். இவ்வாறு இன்றைய சிங்கள ஆட்சியாளர்களும் ஆய்வாளர்களும் என எல்லோருமே ஈழத்தமிழர்களின் தாயகம் சிங்களவர்களின் தாயகம் என்கிற இருதாயகங்களின் தீவு இலங்கை என்பதை ஏற்காத நிலையில் இந்த ஆட்சியிலும் ஈழத்தமிழர்களின் பாதுகாப்பான அமைதி வாழ்வும் வளரச்சிகளும் கேள்விக்குறியாகவே அமையும் என்பது இலக்கின் எண்ணம். இதனை உறுதி செய்யக் கூடிய வகையில் சிங்களவரான முனைவர் தயான் ஜயதிலகா "அநுர குமர திசநாயக்காவின் ஆட்சியில் தமிழ் மக்களின் அரசியல் விருப்புக்களை அடைவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவடைகின்றன" என்று கூறியுள்ளார்.

இவ்விடத்தில் இந்திய மார்க்சியக் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் ஜி. இராமகிருஸ்ணன், தமிழகத்தில் விழுப்புரத்தில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது மாநாட்டில், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வைக் காணுமாறும் கல்வி வீட்டு வசதி சுகாதாரம் நிலம் காவல்துறை அதிகாரம் மாகாண அரசுகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் சிறிலங்காவின் தேசிய மக்கள் சக்தி ஆட்சியாளரைக் கோருகின்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை எழுதியுள்ளார். இதுவே அனைத்துலக இடதுசாரி அமைப்புக்களில் இருந்து இலங்கைத் தமிழர்கள் சார்பாக எழுந்துள்ள முதலாவது கோரிக்கையாக உள்ளது. இவர் "அரசியல் நிர்வாக அதிகாரிகளை மாகாணங்களுக்கு வழங்கல் மூலம் அரசநிர்வாகத்தில் மக்களைப் பங்கேற்க வைத்தல் என்பதையே ஈழத்தமிழர்களின் தேசிய பிரச்சினைக்கான தேசிய மக்கள் சக்தியின் நடைமுறைத் தீர்வாக உள்ளது." எனவும் கூறியுள்ளார். அதே நேரம் இந்திய மாரக்சிஸ்ட் கட்சியின் இலங்கைத் தமிழர் மேலான அக்கறை உலகெங்கும் உள்ள புலம்பெயர் தமிழர்களுக்கு உலகில் உள்ள மாரக்சிய அமைப்புக்களுடனும் ஈழத்தமிழர் நிலைப்பாட்டை பகிர்வதன் மூலம் அநுர அரசை நெறிப்படுத்த அழைக்கிறது.

மேலும் இம்முறைச் சிறிலங்காவின் 77வது சுதந்திரநாள் அமைகின்ற பொழுது இலங்கையின் தமிழர் தாயகப் பகுதிகளான வடக்கு கிழக்கு இந்திய இறையாண்மையுடனும் சிங்களவர்களின் தாயகப் பகுதிகளான அம்பாந்தோட்டை உள்ளிட்ட தென்மாகாணம் சீனாவின் இறையாண்மையுடனும் இலங்கை முழுவதும் அமெரிக்காவினதும் மேற்கு ஐரோப்பிய நாடுகளினதும் பங்காண்மையுடனும் கட்டமைக்கப்பட்ட இறைமைப் பகிர்வுள்ள அரசாகவே இன்றைய சிறிலங்கா அரசு விளங்குகிறது. இந்நேரத்திலாவது சிங்கள அரசாங்கங்களின் ஈழத்தமிழர்களின் இறைமை ஒடுக்க முயற்சிகளும் தேசிய நீக்க முயற்சிகளும்தான் இலங்கைத் தீவின் தனித்துவமான இரு இறையாண்மைகளை இன்று பல நாடுகளின் இறையாண்மைப் பகிர்வு நாடாக மாற்றியுள்ளது என்ற உண்மையை இன்றைய அநுர அரசு உணர வேண்டும் என்பது இலக்கின் எண்ணமாக உள்ளது. பல பில்லியன் டொலர் முதலாளிகளதும் சில டிரில்லியன் டொலர் முதலாளிகளதும் பிரதிநிதிகளைத் சனநாயகத் தேர்தலில் தாம் தேர்ந்தெடுத்த தங்களின் பிரதிநிதிகளை விடச் சிறந்த தங்களின் பிரதிநிதியாகக் கொள்வது மேலானது என்று இன்றைய ‘z’ (இஸட்) இளம் தலைமுறையினர் கருதுகின்ற நேரத்தில் இந்த பிரதிநிதிகளின் குழுநிலை ஆட்சியின் உலகத் தலைவராக அமெரிக்க அரசத்தலைவர் டிரம்ப் "அள்ளித்தா முதலீட்டை அல்லது வரியாய் கிள்ளி எடுப்பேன்" உன் உற்பத்தியை எனச் சண்டப்பிரசண்டம் செய்யும் காலத்தில், ஈழத்தமிழர்களும் தங்களின் ஆற்றலும் அறிவும் உள்ள குழுக்களாகத் தம்மைக் கட்டமைத்துச் செயற்பட்டாலே ஈழத்தமிழர்களின் தாயக இறைமையும் தேசியமும் நிலைபெற வைக்க முடியும் என்பதே இலக்கின் உறுதியான கருத்து.

**ஆசிரியர்**




## ஈழத்தமிழினத்தின் 77வது கரிநாள் பெப்ரவரி 04

**பா.அரியநேத்திரன்**

இலங்கை பிரித்தானியரிடம் இருந்து சிங்கள ஆட்சியாளர்களுக்கு கைமாறியது 1948, பெப்ரவரி, 04ல் அது இலங்கை சுதந்திரம் அடைந்த நாளாக கூறபடுகிறது அதுவே ஈழத்தமிழர்களுக்கு கைவிலங்கு இட்ட கரிநாளாகும். எதிர்வரும் 2025, பெப்ரவரி, 04ம் திகதி 77, ஆண்டு தமிழ் மக்கள் சுதந்திரம் இன்றி அந்த சுதந்திரத்தை மீட்டெடுப்பதற்காக அகிம்சைவழியிலும், ஆயுத வழியிலும், இன்று இராஜதந்திர வழியிலும் ஈழத் தமிழர்கள் போராடிக்கொண்டே இருக்கிறார்கள்.



இன்னும் அந்த சுதந்திரம் தமிழர்களுக்கு கிடைக்கவில்லை. 1948, பெப்ரவரி, 04ம் திகதி சுதந்திரம் கிடைத்து சரியாக பத்துமாதம் கடந்து முதலாவதாக செய்த வேலை மலையகத்தமிழர்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கையாக 1948, டிசம்பர், 10ல் பிரஜா உரிமைச்சட்டம் கொண்டு வரப்பட்டு மலையக மக்கள் வெளியேற்றப் பட்டனர். அதன் உண்மையை உள்ளார்ந்தமாக உணர்ந்த தந்தை செல்வா 1949,டிசம்பர் 18ல் இலங்கை தமிழரசு கட்சியை ஆரம்பித்து தமிழர் களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வே என்பதை வலி யுறுத்தி அதற்காக வேலைத்திட்டங்களை முன் எடுத்தார்.

அகிம்சை ரீதியான பல போராட்டங்கள் இலங்கை சுதந்திரதின நாளை ஏற்றுக்கொள்ளாத நாளாக அறிவிப்பு செய்தல் என்ற எதிர்ப்பு போராட்டங்கள் அப்போது 1949 தொடக்கம் ஈழத்தமிழ் அரசியல் சாத்வீக போராட்டமாக மாறத்தொடங்கியது 1949 ஜனவரி இரண்டாம் வாரத்தில் கொள்ளுப்பிட்டியில் உள்ள தந்தை செல்வாவின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சமஸ்டி அரசியல் திட்டத்தை தந்தை செல்வா சமர்ப்பித்தார். அங்கு குழுமியிருந்த திரு.வன்னிய சிங்கம் உட்பட பல சட்டவல்லுனர்கள் அதை விவாதித்து ஏகமனதாக அங்கீகரித்தனர்.



தந்தை செல்வா இணைப்பாட்சி(சமஷ்டி) தொடர்பாக அளித்த விளக்கங்கள்" ஒற்றையாட்சி முறை, சிங்களவர்கள் தமது சனத்தொகைப் பலத்தை உபயோகித்து தமிழ் இனத்தை அடக்கி ஆள்வதற்கு வசதியளிக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழும் நாடுகளில் ஒவ்வொரு இனமும் தாம் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் தம்மைத் தாமே ஆட்சி புரிய அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் அவரவர்கள் சுதந்திர தனியரசாக இயங்குவதில்லை. சமஸ்டி அமைப்பாக இயங்குகின்றன.



அத்தகைய சமஸ்டி அமைப்புத்தான் இலங்கைக்குத் தேவை."ஈழத் தமிழர்களுக்கு ஒரு சுயாட்சி, தனியரசு வேண்டும் என்பதை 75 வருடங்களுக்கு முன்னர் கூறியது இன்றும் யதார்த்த மாக நோக்கப்படுகிறது. இந்த இலட்சியத்தை அடைவதற்கு 30 வருட காலமாக அகிம்சை வழிப் போராட்டம் நடத்தினர். இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியால் இலங்கையின் சுதந்திரநாளை கரிநாளாகவே நோக்கியது அந்த நாட்களில் கறுப்பு கொடி போராட்டங்களை நடத்தியது அது வடகிழக்கு தழுவியதாக தந்தை செல்வா முன் எடுத்தார்.

1952, பெப்ரவரி, 04ம் திகதி தமிழ் மக்களின் கரிநாள் போராட்டத்தில் திருகோணமலையில் மணிக்கூட்டு கோபுரத்தில் ஏறி கறுப்பு கொடி கட்டியவேளையில் 22, வயது மாணவனாக இருந்த நடராசா என்பவன் இலங்கை பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்டான். அவன் உயிர்நீத்து இன்று 73 வருடங்களாகிறது. 1956, பெப்ரவரி, 04ல் சுதந்திர தின கொண்டாட்டத்தை நடத்திய கையோடு சரியாக நான்கு நாட்கள் கடந்து 1956,பெப்ரவரி,08, S.W.R.D பண்டார நாயக்கா தமது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தேர்தல் விஞ் ஞாபனத்தில் "தனிச்சிங்களம்" நாட்டில் அமுல் படுத்துவேன் என வாக்குறுதி வழங்கினார். அந்த இனவாத கருத்துக்காக சிங்கள மக்களின் அமோக வெற்றியைப் பெற்று தனிச்சிங்களச்சட்டத்தை பாராளுமன்றில் நிறைவேற்றினார்.



இந்த சட்டம் நாடாளுமன்றில் விவாத்த திற்கு வரும் வேளை இலங்கை தமிழரசுகட்சி சத்தியாகிரக போராட்டங்களை நடத்தியது வட கிழக்கு தாயகம் எங்கும் மக்கள் எழுச்சி போராட்டங்களாக மாறியது. பல்வேறுபட்ட வடிவங்களில் அகிம்சை ரீதியிலான போராட் டங்கள், தமிழரசுக்கட்சி மாநாடுகளில் தீர்மான லங்கள், பேச்சுவார்த்தைகள் ஒப்பந்தங்கள் எல்லாம் தந்தை செல்வா மேற்கொண்டார்.

1957, யூலை, 26ல் பண்டா, செல்வா ஒப் பந்தம்,அடுத்து 1965,மார்ச், 24ல் டட்லி–செல்வா ஒப்பந்தம் இந்த இரண்டு ஒப்பந்தங்களும் அப்போது வரலாற்று ஆவனமாக கருதப்பட்டது. இவைகளை சிங்கள பேரினவாத அரசுகள் கிழித்தெறிந்தவரலாறு இனவாத உச்சமாக

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# இலங்கை மக்களின் வாழ்வில், தீவின் புவியியல், அரசியல், புவிசார் –அரசியல், புவிசார் வரலாற்றுக் கட்டமைப்புகளின் பங்கு

## பகுதி 2

இத்தகைய நடைமுறை சார்ந்த பின்னணியில் இலங்கைத் தீவில் நிகழும் ஈழத் தமிழருக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலையை அதற்கே உரிய வகையில் முழுமைப் படுத்தப்பட்ட வரலாற்றுப் பார்வைக்கூடாகப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

ஈழத் தமிழருக்கு எதிரான கட்டமைக் கப்பட்ட இனப்படுகொலைக்கான முக்கிய அடிப்படை இந்து மாகடலின் மையத்தில் இலங்கை - இந்திய அரசுகள் சார்ந்து அமைந் திருக்கக்கூடிய புவிசார்-அரசியல் அமைவிடக் கட்டமைப்பாகும். இந்தவகையில், இலங்கை - இந்திய அரசியலினதும், கூடவே இந்து மாகடலில் தத்தமக்கான நலன்களைக் கொண்ட வெளி அரசுகளினது நிலைப்பாடுகளினாலும், அவ்வக் காலகட்ட வரலாற்றுப் பரிமாணங்களுக்கேற்ப ஈழத் தமிழருக்கு எதிரான இனப்படுகொலையும் பல்பரிமாணம் கொண்ட தொடர் வளர்ச்சிப் போக்கான கட்டமைப்பைப் பெறுகிறது. இத்தகைய புவிசார்-அரசியல் சூழலின் கைதிகளாய் விளங்கும் ஈழத் தமிழரே இதில் முதற்தரப் பலிக்கடாக்களாய் மாள்கின்றனர்.

புவியியல் கட்டமைப்பு *(Natural Geography)*, அரசியல்-புவியியல் கட்டமைப்பு *(Political Geography)*, புவிசார்-அரசியல் கட்டமைப்பு *(Geopolitical structure)*, புவிசார்-வரலாற்றுக் கட்டமைப்பு *( Geohistorical Structure)* என்பனவற்றுடன் கூடவே பொருளாதாரம், மானுடவியல், சமூகவியல், பண்பாட்டு அம்சங்களும் பின்னிப்பிணைந்து அதன் வரலாற்றுப் போக்கை நிர்ணயிக்கின்றன.

எந்த ஓர் கட்டமைப்பிலும் *( Structure )* அதற்குரிய முறைமை *( System )* இருக்கும். அந்த கட்டமைப்பின் அடிப்படையிலான முறைமை அது சார்ந்தவற்றின் வாழ்நிலையை நிர்ணயிக்கின்றது. இந்த வகையில் கட்டமைப்பும் முறைமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் ஆகின்றன. புவியியல் கட்டமைப்பை இரண்டாகப் பகுக்கலாம்.

ஒன்று இயற்கையான புவியியற் கட்டமைப்பு *( Natural Geography)* ; மற்றையது அரசியல் அதிகாரம் சார்ந்த புவியியல் கட்டமைப்பு *( Political Geography )*.

இந்தப் புவியில் மனிதனால் வகுக்கப் படும் ஒரு நாடு என்பதே அரசியற் புவியியல் அமைப்புதான்; அத்துடன் கூடவே ஒரு நாட்டுக்குள் மனிதனால் அரசியல்ரீதியாக வகுக்கப்படும் அரசியல் அதிகாரம் கொண்ட மாநில முறைமை அல்லது மாகாண முறைமை என்பனவும் அரசியற் புவியியல்தான்; நிலப்பரப்பின் மீது ஒரு மக்கள் கூட்டத்திற்கு இருக்கக்கூடிய இனத் தனித்துவத்தையும் அரசியற் பலத்தையும் உடைக்கக்கூடிய வகையில் பிறஇனங்கள் திட்டமிட்டுக் குடியேறுவது அல்லது அந்த நிலப்பரப்பைத் துண்டாடுவது போன்ற இனவழிப்புச் செயல்கள் கூட அரசியற் புவியியல்*(Political geography)* என்ற வடிவத்துள் அடங்குகின்றன.

கட்டமைப்பு*(structure)* இயல்பாகவே தனக்கான முறைமையைக்*(system)* கொண்டிருக்கும் போதிலும், அந்தக் கட்டமைப்பின் அடிப்படையோடு இணைந்து மனிதன் தனக்குச் சாதகமான முறைமை மாற்றங்களை*( System change)* மேற்கொள்ள முடியும். உதாரணமாக அரிசியில் இருந்து நேரடியாக சோறு, அல்லது கஞ்சி சமைக்கலாம். ஆனால் அந்த அரிசியை மாவு ஆக மாற்றிவிட்டால் அதிலிருந்து அப்பம் அல்லது கூழ் சமைக்கலாம். இங்கு அரிசியின் அடிப்படைத் தன்மை இருக்கும். அதனை அதன் அடிப்படை தன்மையில் வைத்து, ஆனால் முறைமை மாற்றத்திற்கு உட்படுத்தி, விரும்பிய வேறு நல்லதைப் பெறமுடிகிறது.

ஒரு புவியியல் அமைவிடத்தை வேறொரு இடத்திற்கு நகர்த்த முடியாது; ஏனெனில் அது இயற்கையால் உருவாக்கப்பட்டது. ஆனால் அந்தப் புவியியல் கட்டமைப்பின் மீது அதற்குட்பட்டு நல்லதாகவோ, அன்றிக் கெட்டதாகவோ, முறைமை மாற்றங்களைச் செய்யலாம். இந்த வகையில் இயல்பான புவியியற் கட்டமைப்பின் மீது பலாத்காரமான அல்லது உணர்வுபூர்வமான



மு.திருநாவுக்கரசு

அரசியற் பலத்தைப் பிரயோகிக்கும் போது புவியியல் கட்டமைப்பாக*(Natural Geography)* இருப்பது அரசியல்-புவியியல்*(Political Geography)* கட்டமைப்பாக பரிணமிக்கின்றது.

எனவே, இக்கட்டமைப்புகளை ஒன்றோடு ஒன்று தொடர்பற்ற பூட்டப்பட்ட தனிப் பெட்டகங்களாக நோக்காமல், அரசியல்-புவியியல்*(Political Geography)*, புவி-அரசியல்*(Geopolitics)*, மெய்யியல் *(philosophy-தத்துவம்)* என்ற மூன்றையும் பின்னிப்பிணைத்துப் பார்க்க வேண்டும்.

புவிப்பரப்பில் 71 % கடல், 29% நிலம். அதிலும் 15% நிலத்திற்தான் மனிதன் வாழ முடியும். நீரின்றி ஆகாது நிலம்; நிலம் இன்றி ஆகாது மக்களும் அரசும். நிலத்தில் அரசு இருந்தாலும் கடலை ஆள்பவனே உலகை ஆள்வான் என்கிறது அரசியல் கோட்பாடு. ஆதலால், நிலத்தையும் நிலத்தைச் சூழ்ந்த கடலையும் சார்ந்த அரசியலை புறவய *(Objective)*, பருப்பொருள் *(Concrete)* நோக்கு நிலையிலிருந்து புரிந்துகொள்ள வேண்டும். புவிசார்-அரசியல் கட்டமைப்பானது பெரிதும் இத்தகைய புறவய - பருப்பொருள் பரிமாணத்தைக் கொண்டது.

புவியியல் அடிப்படையில் அரசியல் உறவை கௌடில்யர் பின்வருமாறு கூறுகிறார். “உனது அண்டை நாடு உனது இயல்பான எதிரி; மறுபுறம் உனது அண்டை நாட்டின் அண்டை நாடு உனது இயல்பான கூட்டாளி”.

*“Your neighbor is your natural enemy and your neighbor”s neighbor on the other side your natural ally” - Kautilya.*

மேற்படி புவியியல் அமைவிடம் சார்ந்த நண்பன் - எதிரி என்ற மதிப்பீட்டுக்கப்பால் பொதுவான நண்பன் - எதிரி சார்ந்து கௌடில்யர் பின்வருமாறு கூறுவதைக் கவனிக்கலாம்.

*“He who has a thousand friends has not a friend to spare, And he who has one enemy will meet him everywhere. The enemy of my enemy is my friend”*

“ஆயிரம் நண்பர்கள் உள்ளவனுக்குத் தக்க தருணத்தில் ஒரு நண்பனும் இல்லாமல் இருப்பான். ஆனால், ஓர் எதிரியை மட்டும் கொண்டுள்ளவனுக்கு அந்த ஓர் எதிரி எல்லாத் தருணங்களிலும் எதிரியாக இருப்பான்.” என்று கூறும் கௌடில்யர், “என் எதிரியின் எதிரி என் நண்பன்” என்று சாதாரண நண்பனை விடவும் எதிரியின் எதிரியை மேலும் பலமான நண்பன் என்று கூறுகிறார்.

இங்கு சாதாரணமான எதிரிகளுக்கு இடையே நிரந்தரப் பகைமை இல்லாது போவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. ஆனால், புவியியல் அமைவிடம் நிரந்தரமானது என்பதால் புவியியல் அடிப்படையிலான எதிரி அடிப்படையில் நிரந்தரமான எதிரியாவான். ஆதலால், புவியியல் அமைவிட ரீதியான நண்பன் - எதிரி உறவானது சாதாரண நண்பன்-- எதிரி உறவை விடவும் அதிகம் வலிமையானது.

தீவு அரசு, தீவு நாடு, தீவுத் தேசம் *(Island nation)* என்பன தரைவழி எல்லையைக் கொண்ட நாடுகளை விடத் தற்காப்பில், ஒப்பீட்டு ரீதியாகப் பலமானவை. இலங்கை ஒரு தீவாக இருப்பதுதான் அதனை ஒரு அரசாக: நாடாக இருப்பதைச் சாத்தியமாக்கி உள்ளது. ஆனால், ஒரு பெரும் கடலால் அன்றி இந்தியாவுக்கு அருகே 27 கிலோமீட்டர் (14.4 நோட்டிகல் மைல்) அகலமான ஒரு சிறிய பாக்குநீரிணையால் பிரிக்கப் படுவது இலங்கைக்குப் பெரும் சவாலாக உள்ளது.

அதாவது, தீவு என்பது வரமாகவும், ஆனால் இந்தியாவுக்கு மிக அருகே தமிழகத்தோடு ஒட்டியவாறு இருக்கும் சிறிய பாக்கு நீரிணை என்பது அதற்கு சாபமாகவும் உள்ளது. அதாவது, இலங்கைக்கு பாக்கு நீரிணை ஒருபுறம் வரமாகவும் மறுபுறம் சாப மாகவும் இரட்டைப் பரிமாணங்களைக் கொண்டிருப்பதானது இந்திய அரசியலையும், ஈழத் தமிழர் தலைவிதியையும் நிர்ணயிக்கும் கட்டமைக் கப்பட்ட இனப்படுகொலைக்கான அடிப்படையாய் உள்ளது.

தொடரும்...

---

**கனடாவின்... தொடர்ச்சி ...**

நீதிபதி தலைமையிலான ஆணைக்குழு கடந்த செவ்வாய்க்கிழமை(28) தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ரஸ்யா, ஈரான், சீனா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளும்தமது தேர்தல்நடைமுறையில் தலையீடுகளை மேற்கொள்வதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இந்த அறிக்கையை தாம் முற் றாக நிராகரிப்பதாகவும் கனடாவிற்குள் குடிவந்துள்ள சட்டவிரோத குடியேற்றவாசிகள் மற்றும் குற்றவாளிகளால் தான் கனடாவின் தேர்தல் நடைமுறைகள் பாதிக்கப்படுவதாகவும் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கனடாவில் வசித்து வந்த சீக்கிய மதத்தின் தலைவர் ஒருவரை இந்தியாவின் உளவு அமைப்பு படுகொலை செய்ததாக 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கனேடியப் பிரதமர் குற்றம் சுமத்தியதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் அதிக விரிசல்கள் ஏற்பட்டிருந்தன.

அதன் பின்னர் அமெரிக்காவில் உள்ள சீக்கிய அமைப்பான காலிஸ்தான் அமைப்பின் தலைவர் ஒருவரை இந்திய புலனாய்வு அமைப்பு படுகொலை செய்ய முற்பட்டதாக கூறி அமெரிக்கா இந்திய பிரஜை ஒருவரை செக் குடியரசில் வைத்து கைது செய்திருந்தது.



# இலங்கையின் 77ஆவது சுதந்திர தினம்:
## நாம் இன்னும் சுதந்திரத்தை அடையவில்லை

ஹஸ்பர் ஏ ஹலீம்

இலங்கையின்77ஆவதுசுதந்திரதினம்எதிர்வரும் 04 ம் திகதி கொண்டாடப்படவுள்ள நிலையில் இலங்கை அரசாங்கம் அதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றது. பொது மக்களும் இம் முறையும் சுதந்திர தின கொண்டாட்டங்களைக் கண்டு கழிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.



எது எவ்வாறாக இருந்தாலும் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்கள் பல வலிகளுடன் வாழ்ந்து வருவதனை அவதானிக்க முடிகிறது. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டு அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செல்ல முடியாத நிலையில் நாட்டின் சுதந்திர தினம் பற்றி பெரிய அளவில் ஆர்வம் காட்டவில்லை. மேலும் அத்தியவசிய பொருட்களின் விலை அதிகம், வாழ்க்கை சுமை கடந்த கால போரில் ஏற்பட்ட உறவுகள் இழப்பு, கடத்தப்பட்டு காணாமல் போனமை தொடர்பான போராட்டங்களை சுமந்த வண்ணம் வாழ்கின்றனர்.

இந்த நிலையில் இலங்கை 1948 பெப்ரவரி 04 ல் சுதந்திரம் பெற்றாலும் அது பெரும்பான்மை சமூகத்துக்கு கிடைக்கப் பெற்ற சுதந்திரமாகவே பார்க்கப்படுகிறது. இம் முறை சுதந்திர தினமானது “தேசிய மறுமலர்ச்சிக்காக அனைவரும் அணி திரள்வோம்” எனும் தொனிப் பொருளின் கீழ் கொண்டாடப்படவுள்ளது.

இருந்த போதிலும் இது குறித்து வடக்கு கிழக்கு காணாமல் ஆக்கப்பட்ட சங்கம் ஊடகங்களுக்கு இந்த நாளை கரி நாளாக அனுஷ்டிக்க வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளது.

இதுகுறித்து குறித்த சங்கத்தின் இணைப்பாளர் மனுவல் உதயச் சந்திரா தெரிவிக்கையில், இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினத்தினை கறுப்பு நாளாக நினைவு கூர்ந்து தமிழ் மக்களின் வலிகளையும் சர்வதேசத்துக்கு மட்டுமல்ல அநுர அரசாங்கத்துக்கும் எடுத்து கூறுவதற்கு அணி திரள வேண்டும் என தெரிவித்தார்.

இலங்கையின் சுதந்திர தினத்தை இராணுவ மரியாதையுடன் துப்பாக்கி வேட்டுக்களுடனும் படை வீரர்களின் சாகசங்களுடனும் அநுர தரப்பு பல இலட்சம் ரூபாக்களை செலவு செய்து கொண்டாடவுள்ளது.

இந்த நிலையில் தற்போதைய நெருக்கடிக்குள் இது தேவை தானா என மக்கள் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் திருகோணமலை மாவட்டத்தில் தெருவோர வியாபாரி எம்.எம்.முஹம்மட் தெரிவிக்கையில் “இலங்கை சுதந்திரம் பெற்றாலும் எங்களுக்கு சுதந்திரம் கிடைக்க வில்லை .தேசிய கொடி விற்பனை இம் முறை குறைவாகவுள்ளது. நாடு போகின்ற போக்கில் இது நமக்கு சந்தோசமாக தெரியவில்லை. நாங்கள் வியாபாரம் செய்தால் தான் எங்களுக்கு சோறு. நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்க எங்களுக்கு சுதந்திரத்தை பெற்றுத் தாருங்கள் எனத்தெரிவித்தார்.

இந்த சுதந்திர நாளில் அரச திணைக்களங்களில் தேசிய கொடிகள் ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டு வெகு விமர்சையாக கொண் டாடி வந்தாலும் பல பாமர மக்கள் இதனை வெறுக்கின்றனர்.



“எங்களுக்கு நீதி வேண்டி கடந்த 18 வருட காலமாக போராடுகின்றோம். சர்வதேசத்திடம் இருந்தோ இலங்கை அரசாங்கத்திடம் இருந்தோ எந்த வித பதில்களும் கிடைக்கவில்லை. எனவே தான் சுதந்திர நாளை கொண்டாட மாட்டோம். எங்களுக்கான நீதியை விசாரணை மூலம் பெற்றுத் தர வேண்டும். ஐக்கிய நாடுகள் சபை , அநுர அரசும் இதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டும். காணாமல் போன உறவினரை தாருங்கள் “ என வலிந்து கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவரின் உறவினர் எஸ்.சிறி தேவி தெரிவித்தார்.

சந்தோஷம் மற்றும் பெருமை என பெரும்பான்மை சமூகம் சுதந்திர நாளை நினைத்து பார்க்கின்றனர். சுதந்திரம் பெற்ற தினம் மக்கள் பெரும்பாலும் தங்களின் வரலாற்று பயணத்தை நினைவுகூர்ந்து கொண்டாடுவார்கள். எத்தனையோ உழைப்பு, போராட்டம், தியாகம் ஆகியவற்றின் பின், இந்நாளில் சுதந்திரம் பெற்றதை பெருமையாகக் கருதுவர்.

“இலங்கை தேசம் சுதந்திர தினத்தைக் கொண்டாடினாலும் நாட்டின் பொருளாதார, அரசியல் மற்றும் சமூக நிலைகள் இன்னும் பல சவால்களைத் தொடர்ந்து சந்திக்கின்றன. அதாவது, பல்வகையான சமூக, பொருளாதார பிரச்சினைகள் நிலவும் நிலையில் சுதந்திரம் அப்படி பலத்த அங்கீகாரம் பெறவில்லை என சமூக செயற்பாட்டாளர் அ.மோகன் தெரிவித்தார்.

நாட்டின் சுதந்திரத்தை, மக்களின் ஒருங்கிணைந்த முயற்சியுடன் நிலைத்திருக்க வேண்டிய அவசியம் பற்றி பலர் பேசுகிறார்கள். வரலாற்றில் உள்ள பின்விளைவுகளை எண்ணி, மக்களின் ஒற்றுமை மற்றும் கூட்டிணைப்புக் கொண்டாட்டம் மிகவும் முக்கியமாகும். இருந்த போதிலும் இது குறித்து மக்கள் உணர்வு பூர்வமாக குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் இதனை கொண்டாட முடியாதளவுக்கு வெறுப்புணர்வுடன் வாழ்கிறார்கள் . இதற்கான காரணம் தமிழ் மக்கள் தமக்கான தீர்வு விடயத்தில் தொடர்ந்து ஏமாற்றப் பட்டு வருவதே.




இவ்வாறான நிலையில் இது குறித்து ஆசிரிய சமூகத்தை சேர்ந்த ஒருவர் தெரிவிக்கையில், “சுதந்திர நாளின் மதிப்பை மக்கள் வெவ்வேறு விதங்களில் உணர்ந்து கொண்டிருக்கின்றனர் தென்னிலங்கையில் ஒரு புறமும் மறு புறம் வடக்கு கிழக்கில் வித்தியாசமான உணர்வு கிடைக்கப் பெறுகிறது. இலங்கை சுதந்திரம் பெற்றது முதல் ஆட்சிக்கு மாறி மாறி வந்த அரசாங்கம் இனவாதம் மதவாதம் போன்றவற்றை வைத்து சிறுபான்மை சமூகத்தை சீண்டி பார்க்கிறது. முன்னர் ஆட்சி செய்த ரணில் அரசாங்கம், மஹிந்த அரசாங்கம் முதல் தற்போதுள்ள அநுர அரசாங்கம் வரை மக்களை வெறுப்படைய செய்துள்ளது “ என தெரிவித்தார்.

இளைஞர் சமுதாயம் வேலையில்லாமல் இந்த நாளில் திண்டாடுகின்றனர் வடக்கு கிழக்கில் வேலையற்ற பட்டதாரிகள் அரசாங்க துறையில் வேலை வாய்ப்பு கோரி பல போராட்டங்களை முன்னெடுக்கின்றனர்.

**வேலையற்ற பட்டதாரி ஒருவர் சுதந்திர தினம் பற்றி தெரிவிக்கையில்,**

‘’இலங்கை முன்னேறியிருப்பதாக சிலர் உணர்ந்தாலும், வாழ்க்கைத் தரம் மற்றும் சமூக

தொடர்ச்சி 08ஆம் பக்கம்



# போதைப்பொருளும் தமிழ் இளையோரும்: சவால்கள், விளைவுகள் மற்றும் மாற்றத்திற்கான வழிகள்



பல்கலைக்கழக பழைய மாணவர்
**தர்சிகன் மசனய்யா**

**தமிழர் தாயகத்திலே 2009ம் ஆண்டு தேசிய விடுதலை இயக்கத்தினுடைய ஆயுத மௌனிப்பிற்கு பின் இந்த போதைப் பொருள் என்பது பெரும் அளவிலே நமது இளையோர்களை சீரழித்துக் கொண்டிருக்கின்றது. நாம் ஒரு அறத்துடனும் பண்புடனும் மதிப்புடனும் பெண்களை மதிக்கின்ற பண்பாட்டுடன் வாழ்ந்த ஒரு இனம். தமிழ் இனத்தினுடைய கலாசார பண் பாட்டு சீரழிவுக்கு மிக முக்கியமாக போதைப் பொருள் பாவனை என்பது எமது அடுத்த தலைமுறையின் ஆளுமையை அழித்துக் கொண் டிருக்கின்றது. மெதுமெதுவாக வடக்கு கிழக் கில் தமிழர்களுடைய பூர்வீக நிலமெங்கும் பரவிய இந்த போதைப்பொருள் இன்று பல்கலைக்கழக வளாகங்கள் வரைக்கும் வந்து விட்டன.**

**இந்த போதைப் பொருளை அகற்ற வேண்டு மாக இருந்தால் நாம் என்ன செய்ய வேண்டும்? மாணவர்களுக்கு என்ன ஆலோசனைகளை வழங்க முடியும் என நினைக்கின்றீர்கள்?**

*நிச்சயமாக பல்கலைக்கழகம் என்பது மாண வர்கள், பலதையும் கற்றுத் தேர்ந்து சமூகத்தில் ஒரு முன்மாதிரியாக வரக்கூடிய ஒரு ஒரு களமாகத்தான் அமைகின்றது.*

*இந்த பல்கலைக்கழகங்களிலே போதை பொருள் என்கின்ற ஒரு விடயத்தை இன்றைய சூழலிலே கடந்த சில நாட்களுக்கு முன்பு நடந்த விடயங்களை முன்னிறுத்தி பேசுபொருளாக்கிக் கொண்டிருக்கிறோம். இந்த போதை பொருள் என்பது வெறுமனே குறிப்பிட்ட சில காலத்தில் பல்கலைக்கழகத்துக்குள்ளே வந்தது அல்ல. இது பல்கலைக்கழகங்களிலே யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலே மட்டும் தான் இருப்பதும் அல்ல. ஆனாலும் இதிலே போதை பொருளை நாங்கள் ஆதரித்து பேசவில்லை. நிச்சயமாக மக்களுக்கு சில கருத்துகளை கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பு பல்கலைக்கழகம் சார்ந்த சமூகமாக இருக்கின்ற காரணத்தால் எமக்கு இருக்கின்றது. எனவே இந்த கருத்தை மக்களுக்கு கூற முற்படுகின்றோம்.*

*இலங்கையிலே இருக்கின்ற பல்கலைக் கழகங்களிலே போதைப் பொருள் பாவனை என்பது மிகவும் ஒரு பேசுபொருளாக அல்லது ஒரு சவால் மிக்க ஒரு இளைய சமுதாயத்தை திசை திருப்பக்கூடிய ஒரு விடயமாக இருந்து வருகின்றது. அது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்குள்ளும் இருக்கின்றது.*

*இன்று யாழ். பல்கலைக்கழகத்திலே மட்டும் தான் இந்த போதைப்பொருள் எங்களுடைய சமுதா யத்தை சீரழிக்கின்றதா என்றால் இல்லை. வடக்கு கிழக்கு முழுவதிலுமே மக்கள் மத்தியில் இந்த போதை பொருள் பாவனை என்பது வேரூன்றித் தான் இருக்கின்றது.*

*இது திட்டமிடப்பட்டும் எங்களுடைய அறியாமையாலும், சரியான விதத்தில் இந்த போதை பொருள்கள் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தி இளையவர்களை கட்டமைக்க தவறி யதாலும் இன்று அது ஆழமாக தமிழ் சமுதாயத்தில் வேரூன்றி வருகின்றது.*

*இதனுடைய ஒரு பிரதிபலிப்பாகத்தான் பல்கலைக்கழகத்துக்குள்ளே இடம்பெற்ற ஒரு சம்பவம் மிகவும் பேசுபொருளாக மாறியிருக் கின்றது. இதற்குரிய காரணத்தை வெறுமனே பல்கலைக்கழக மாணவர்கள் மீது மட்டும் சுமத்தி விட்டு போக முடியாது.*

*தமிழ் சமுதாயத்தில் இருந்துதான் இந்த மாணவர்கள் வருகின்றார்கள். இந்த பல்கலைக் கழகத்துக்கு வருகின்ற இந்த மாணவர்களும் ஏனைய இளைஞர்களுக்கும் போதை பொருள் சார்ந்த விழிப்புணர்வை அது சார்ந்த தெளிவு படுத்தல்களை கட்டமைத்து அவர்களை வழி நடத்த வேண்டிய ஒரு பொறுப்பு மக்கள் சார்ந்து சிந்திக்கின்ற பொது அமைப்புகள், அரசியல் கட்சிகள்,பல்கலைக்கழக நிர்வாகம் என அனைவருக்குமே இருக்கின்றது.*

*அந்த விதத்தில் பல்கலைக்கழகத்துக் குள்ளே இடம்பெறுகின்ற அந்த விடயங்களை பல்கலைக்கழக சமூகமாக பார்த்து விளங்கிக் கொள்கின்ற ஒரு தன்மைக்கும் வெளியிலிருந்து பல்கலைக்கழகத்துக்குள்ளே இடம் பெறுகின்ற ஒரு விடயத்தை விளங்கிக் கொள்ளுகின்ற தன்மைக்கும் வேறுபாடுகள் இருக்கின்றது.*

*பல்கலைக்கழகத்திலே இருக்கின்ற மாண வர்களுக்கும் வெளியிலே இருந்து பல்கலைக் கழகத்தை அவதானிக்கிறவர்களுக்கும் வித்தியா*

**அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்கள நிகழ்ச்சி யில் கலந்து கொண்டு பல்கலைக்கழக பழைய மாணவர் தர்சிகன் மசனய்யா அவர்கள் முன்வைத்த கருத் துக்களை இலக் கின் வாசகர்களுக் காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமை யாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான்(Scan) செய்யவும்.**

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# வடக்கு கிழக்கில் இந்தியா மேற்கொள்ளும் நடவடிக்கைகளை நிறுத்துமாறு மோடிக்கு கடிதம்

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இந்தியா மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளையும் 2025 ஏப்ரல் 30க்குள் நிறுத்துமாறு கோரி இந்திய பிரதமர் நரேந்தி மோடிக்கு புலம்பெயர் அமைப்பு ஒன்றின் சார்பில் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

**அதன் முழுமையான வடிவம் வருமாறு:**

**ரெவ. லோகேஸ்வரன் தர்மலிங்கம்**
**ஹெய்ன்ரிச்சுஸ்டிராஸ் 80**
**8005 சூரிச்**
**சுவிஸ்**

**தேதி: ஜனவரி 21, 2025**
**இந்தியாவின் கௌரவ பிரதமர்**
**மாண்புமிகு நரேந்திர மோடி**
**தெற்கு பிளாக், செயலாளர் கட்டிடம்**
**புது தில்லி, இந்தியா**

**பொருள்:**

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இந்தியாவின் அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்துமாறு கோரிக்கை

மாண்புமிகு பிரதமரே,

மிகுந்த மரியாதையுடன், சிக்கலான உரையாடல் மற்றும் ஓரளவிலான தீர்வுகளின் ஆவலுடன் நான் உங்களுக்கு எழுதுகிறேன். நான் ரெவ. லோகேஸ்வரன் தர்மலிங்கம், 1989 முதல் சுவிஸ் நாட்டில் தஞ்சமடைந்துள்ள இலங்கையர். நமது இரண்டு நாடுகளின் இடையேயான ஆழ்ந்த தொடர்புகளை நேரடியாக அனுபவித்து, அதன் தாக்கங்களைப் பகிர்ந்து கொண்டுள்ளேன். முதலில், உங்கள் அரசு இலங்கைக்கு வழங்கிய பல்வேறு உதவிகளுக்காக எனது நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன். குறிப்பாக சமீபத்திய பொருளாதார நெருக்கடிகளில், உங்களின் மனிதாபிமான மற்றும் பொருளாதார ஒத்துழைப்புகள் இலங்கை மக்களின் தற்காலிக தேவைகளை பூர்த்தி செய்ததற்காக நான் மனமார்ந்த நன்றி கூறுகிறேன்.

ஆனால், அதே சமயம், இலங்கையின் நிலையான நிலைமை மற்றும் இறையாண்மையைப் பாதிக்கும் முக்கியமான ஒரு விஷயத்தை நான் உங்களிடம் தெளிவாக கூற வேண்டும். இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இந்தியா மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளையும் 2025 ஏப்ரல் 30க்குள் நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். இவற்றில் தற்காலிக நன்மைகள் இருந்தாலும், அவை எங்கள் தேசிய அடையாளத்தையும், கலாச்சார மதிப்புகளையும், சமூக ஒருமைப்பாட்டையும் பாதிக்கும் பிரச்சனைகளை உருவாக்கியுள்ளது.

இலங்கை இன்று ஒரு முக்கியமான திருப்புமுனையில் உள்ளது. அமைதி, சுயநிர்ணயம் மற்றும் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்ட நாடு உருவாக வேண்டும் என்பதே எங்களின் விருப்பமாகும். ஆனால் இது வெளிநாட்டு தலையீடுகள் இல்லாத சூழ்நிலையில் மட்டுமே சாத்தியமாகும்.

இந்தியாவின் தொடர்ந்து செய்யப்படும் செயல்பாடுகள் எங்கள் மாகாணங்களின் அரசியல் சூழ்நிலையையும், சமூக அமைப்பையும் தாக்கியுள்ளது. இதனால் எங்கள் எதிர்கால குழந்தைகள் மற்றும் சமூகத்தின் மீதான தாக்கங்கள் தொடர்ந்து காணப்படுகிறது.

தனிப்பட்ட முறையில், இந்த நிலைமை என்னையும் உலகத் தழுவிய தமிழ் அகதிகளையும் தீவிரமாக பாதித்துள்ளது. 1989 இல் உள்ளூர் அரசியல் மற்றும் சமூக சூழ்நிலைகளால் என் தாயகத்தை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்தில் நான் இருந்தேன். எனது நாடு மீதான வெளிநாட்டு அதீத தலையீடுகள் எனது அகதியாக்கத்திற்கும் தொடர்ந்து பாதிப்பிற்கும் மூல காரணமாக இருந்தது.

இந்தக் கடிதத்தின் மூலம், உங்கள் அரசாங்கம் இந்த முயற்சிகளை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்கிறேன். இது நமது நாடு தனது சுய அடையாளத்தைக் கட்டியெழுப்புவதற்கான அடிப்படையை அமைக்கும்.

உங்களின் புரிதலும் ஆதரவும் இக்கோரிக்கைக்கு ஒத்துழைக்கும் என நம்புகிறேன்.

**உங்கள் மரியாதையுடன்,**
ரெவ. லோகேஸ்வரன் தர்மலிங்கம்

- ஹிந்து புத்த மன்றத்தின் தலைவர், சுவிஸ்
- தமிழ் புத்த மன்றத்தின் தலைவர்
- புத்த பவனா மன்றத்தின் செயலாளர், சூரிச்
- வன்முறைக்கு எதிரான சங்கத்தின் தலைவர்

**குறிப்பு:** இந்தக் கடிதத்தின் பிரதிகளை, ஐக்கிய நாடுகள் அமைப்பு, அமெரிக்கா, சுவிஸ் மற்றும் பிற சர்வதேச இராஜதாந்த உறவுகள் கொண்ட அமைப்புகளுக்கு அனுப்பப்படும். இது சர்வதேச ஒத்துழைப்பின் அடிப்படையில் கவனிக்கப்பட்டு பரிந்துரைக்கப்படும்.



## இலங்கையின் ... தொடர்ச்சி ...

நீதியில் இன்னும் பெரும்பாலான மாற்றங்கள் இல்லாமல் இருக்கின்றன. பலர் அன்றாட வாழ்வில் பொருளாதார சவால்களை எதிர்கொள்கிறார்கள். இப்போது, அவர்களுக்கான அதிக அக்கறை பொருளாதார நிலவரங்கள், வேலைவாய்ப்பு மற்றும் அத்தியாவசிய தேவைகள் பற்றியது இதனை செய்யுங்கள் அப்போது தான் சுதந்திரம் மக்களுக்கு தானாக கிடைக்கும்'' என்றார்.

''சுதந்திரம்'' என்பது அவர்களுக்குக் கருணையாக இருக்கின்றது. எளிய மக்களுக்கு அது, இனச்சார்பு, இலங்கை அரசின் முந்தைய காலப் பிரச்சினைகள் மற்றும் எதிர்கால மக்களின் முன்னேற்றத்திற்கு உறுதிப்படுத்தும் ஒரு நாள் ஆக இருக்கிறது. வீண் செலவுகளை நிறுத்துங்கள். படம் காட்டுவதை இத்துடன் நிறுத்தங்கள் என தினக் கூலி தொழிலாளியான அன்பாஸ் தெரிவித்தார்.

இவ்வாறாக சுதந்திர தினம் மக்கள் மனதில் பல மாற்றங்களை இம் முறை ஏற்படுத்தியுள்ளது .மக்கள் சிலர் சுதந்திர தினத்தை நினைவுகூரும்போது, நாட்டின் ஒற்றுமையை அதிகரிக்கும் வகையில், சகோதர உணர்வுடன் வாழ வேண்டும் என்றும், அத்துடன் அனைத்து சமூகத்திற்கும் சமவாயத்தை வழங்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

அவர்கள் சிலர், வரலாற்றின் சவால்களை எப்போதும் மறந்துவிடாமலும், நாட்டின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றனர்.

பொதுவாக, இந்த நாளை சிலர் பெருமையுடனும் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறார்கள், மற்றவர்கள் வாழ்க்கையின் சவால்களை சமாளிப்பதற்கான பிரச்சினைகள் மீது கவனம் செலுத்துகின்றனர். ஒட்டு மொத்தமாக இலங்கை நாட்டை சேர்ந்த மக்கள் பல விதமான கொள்கை கொண்டவர்களாக வாழ்கின்றார்கள். நாடு சுதந்திரம் பெற்ற போதிலும் மக்களின் கருத்துக்களை பார்க்கான்ற போது மக்கள் சுதந்திரம் அற்ற நிலையில் இருப்பதாக தெரிகின்றது.

• • •

## பயணிகள் விமான ... தொடர்ச்சி ...

பாக அவதானித்து வருவதாக அமெரிக்காவின் அதிபர் டொனா ல்ட் டிறம் மற்றும் பாது காப்புச் செயலாளர் ஆகியோர் தமது அறிக் கையில் தெரிவித்துள்ளனர். இந்த செய்தி எழுதப்படும் வரையில் 18 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு இடம்பெற்ற தேசிய மட்டத்திலான பனிச்சறுக்கு விளையாட்டுபோட்டியில் கலந்த பின் திரும்பிக்கொண்டிருந்த மிகச்சிறந்த விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் இந்த விபத்தில் கொல்லப்பட்டுள்ளனர். அதில் ரஸ்யாவைச் சேர்ந்த உலக விருதுபெற்ற யெவ்ஜினியா சிஸ்கோவா மற்றும் வடிம் நோமோய் ஆகிய இரு வீரர்களும் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே இந்த விபத்தை தம்மால் நம்பமுடியவில்லை எனவும், விமானங்கள் தமக்கிடையே தொடர்பாடல்களை மேற்கொள்ளக்கூடியவை எனவும் அமெரிக்காவைச் சேர்ந்த வான்போக்குவரத்து நிபுணர் ஜெப்ரி தோமஸ் தெரிவித்துள்ளார். மிகப்பெரிய விமானத்தை எவ்வாறு உலங்குவார்தியில் இருந்தவர்கள் அவதானிக்க முடியாது போனது என்ற கேள்விகளும் எழுந்துள்ளன. விமானம் உங்கள் பாதையில் தெரிகின்றதா என விமானக் கட்டுப்பாட்டு அறை அனுப்பிய தகவலுக்கு உலங்குவானனுரர்தியில் இருந்து எந்த பதிலும் கிடைக்கவில்லை என சி.என்.என் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.



# திருக்கோணேஸ்வரம்





## திருமலை. நவம்

‘ஈழைத் தேசத்திலுள்ள கிறிஸ்தவர் அல்லாத மக்களின் உரோமாபுரி திருக்கோணேஷ்வரம்” என வர்ணித்துள்ளார் 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த போர்த்துக்கீச பாதிரியார் குவைரோஸ். கி. முன் 6000 வருடங்களுக்கு முன் இலங்கையை ஆண்ட அராவணேஷ்வரன் என்னும் மன்னன் வழிபட்ட 7 ஆம் நாற்றாண்டில், திருஞானசம்பந்தரால் பாடப் பட்ட குளக்கோட்ட மன்னனும் கஜபாகு மன்ன னும் திருப்பணி செய்த உலகப்புகழ் பெற்ற ஒரு ஆலயம் திருக்கோணேஷ்வரம்.

ஈழத்தில் காணப்படும் நகுலேஸ்வரம், முனீஷ்வரம், திருக்கேதீஸ்வரம், தொண்டேஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய ஐந்து ஈஸ்வரங்களில் இதுவுமொன்றே.

திருகோணமலை என்பது தெயவீகத்தன்மை வாய்ந்தது என்று பொருள்படும். இதற்கு கோகண்ணம், கோகர்ணம், திருகோணமலை, திருக்குன்றாமலை, கோணமலை, மச்சேந்திர பர்வதம், மச்சேஸ்வரம், தெக்கண கைலாசம், தென்கையிலாசம், எனப் பல பெயர்கள் வருவத ற்குகாரணம் திருக்கோணேஸ்வரம் என்னும் உலகப் புகழ் கொண்ட ஆலயமாகும். இலங்கையின் கிழக்குக் கரையில் திரிகோண வடிவில் அமைந் திருக்கும் மலையின் உச்சியில் கோணேஷ்வரம் அமைந்திருப்பதனால், இதற்குத் திருக்கோணேஸ் வரம் என்ற நாமம் ஏற்பட்டுள்ளது. ஐரோப்பி யருடைய ஆட்சிக்காலத்தில் அதனை சுவாமி மலை என்றும் கோணேஷர் மலை என்றும் அழைத்து வந்துள்ளனர்.

திருகோணமலைக்கென்று ஒரு விஷேட மான நாகரீகம் இருந்துள்ளமையால் திருகோண மலை நாகரீகமும் மொஹஞ்சதாரோ நாகரீகமும் ஏறக்குறைய ஒரே காலத்துக்குரியவையென ஆய் வாளர்கள் குறிப்பிடுவர். திருக்கோணேஷ்வரத்தின் தெய்வீக எழுச்சியை திருஞான சம்பந்தர் எவ்வாறு திருக்கோணேஷ்வரப்பதிகத்தில் பாடினாரோ, அதே போல் பின்வரும் நூல்கள் விரிவாக எடுத்து இயம்புகின்றன. தெட்ஷண கைலாசபுராணம், திருக்கோணாசலபுராணம், கோணேசர் கல்வெட்டு, திருமுறைகள், யாழ்ப்பாண சரித்திரம், தமிழரும் இலங்கையும், திருகோணமலை அந்தாதி என்பன போன்ற திருக்கோணேஸ்வரம் தொடர்பான பல நூல்கள் எழுந்தபோதும், கோணேஷ்வரம் பற்றிய நூல்களிலே தட்சஷண கைலாசபுராணமும் திருக்கோணாசல புராணமும் பிரசித்தி பெற்றவை. தெட்ஷண கைலாசபுராணம் இது கோணேஷர் ஆலயம் தொடர்பான தல புராணமாகும். இவ்விரு புராணங்களில் கூறப்படும் கர்ண பரம்பரைக்கதைகளின்படி கி. முன் ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன் இராவணேஷ்வரன் வழிபட்ட தலம் கோணேஷ்வரம் எனவும். இராமாயண இதிகாசத்தில் உள்ளபடி, இராவணன் தனது தாயாரின் விருப்பத்துக்கு அமைய லிங்கம் ஒன்று பெறுவதற்காக அங்கு தவம் செய்தான் என்று கூறும் கதை மூலம் இது மிகப் பழமை வாய்ந்த ஆலயம் எனவும் பெருமைப்பட முடிகிறது.

திருக்கோணேஷ்வரம் பற்றி ஏழு கல்வெட்டுகள் உள்ளதாக பேராசிரியர் சி. பத்ம நாதன் குறிப்பிடுவார்.

13ம் நூற்றாண்டைச் சேர்ந்த துண்டாமன சமஸ்கிருத கல்வெட்டு, 14 ஆம் நூற்றாண்டுக்குரிய கங்குவேலி கல் வெட்டு. கோட்டை வாசல் கல் வெட்டு. கந்தளாய்க்கல் வெட்டு, 8ம் நூற்றாண்டைச் சேர்ந்த மானாங்கேணி கல்வெட்டு, 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நிலாவெளி கல்வெட்டு. இவை போன்றே பெரிய குளக் கல்வெட்டு, பள மோட்டை கல் வெட்டு என திருகோணமலைப் பிராந்தியத்தில் கண்டெடுக்கப்பட்ட கல் வெட்டு கள் திருக்கோணேஷ்வரத்துடன் தொடர்புபட்ட கல் வெட்டுகளாகக் காணப்படுகிறன.

1236 ஆம் ஆண்டு இலங்கையைக் கைப் பற்றி ஆண்ட வீரபாண்டியன் என்ற மன்னன் கோணேஷ்வரர் ஆலயத்தில் மீன் இலச்சினையைப் பொறித்து சென்றதாகவும் மகாசேனன் என்ற மன்னன் அனுராதபுரத்தை ஆட்சி செய்த காலத்தில் கி.பி 276. 303 கோகோணம்என்று அழைக்கப்படும் கோணேஷ்வரத்தை இடித்து, அதற்கு அருகில் பௌத்த விகாரையை அமைத்தான் என மஹா வம்சமும் 1624 ஆம் ஆண்டு போர்த்துக்கீசர் இவ்வாலயத்தை இடித்து கோட்டை யொன்றைக் கட்டினர் என வரலாற்று ஆசிரியர்களும் பதிவு செய்துள்ளனர்.

கோணேஷர் ஆலயம் பற்றி ஆதி கால புராணங்கள் கூறும் செய்திகளையும் தெரிந்து கொள்ளவேண்டும். வட மொழியில் எழுதப்பட்ட செவ்வந்தி புராணத்திலும் குப்த பேரரசு காலத்தில் எழுதப்பட்ட வாயு புராணத்திலும்( கி.பி 4, 5 ) கோணேஷ்வர ஆலயத்தின் தோற்றம் பற்றி பின் வருமாறு கூறப்படுகிறது.

சிவன் உமா தேவியுடன் திருக்கைலாசத்தில் வீற்றிருக்கிறார். மும்மூர்த்திகளும் தேவர்களும் கணநாதர்களும் வணங்கி நிற்க ஆதி சேடனுக்கும் வாயுபகவானுக்கும் இடையில் ஏற்பட்ட யார் பலசாலிகள் என்ற கடும் போரில் அண்டங்கள் அசைந்தன. தேவர்கள் அஞ்சி நடுங்கினர். வாயுபகவான் சிவன் எழுந்தருளி இருந்த திரிகோண சிகரத்தையும் வேறு இரு சிகரங்களையும் பிரித்தெடுத்தது கண்ட சிவன் வாயு பகவானை நோக்கி நீ பறித்தெடுத்த சிகரங்களில் திரி கோண சிகரத்தை ஈழநாட்டிலுள்ள கிழக்குச் சமுத்திரக்கரையில் வைப்பாயாக என்றும் ஏனை இரு சிகரங்களையும் திருக்காளத்தி என்னும் இடத்திலும் திருச்சிராப்பள்ளியிலும் வைக்கும்படி திருவாய் மலர்ந்தருளியதாக மேற்படி புராணங்கள் இயம்புகின்றன.

திரிகோணாசலம் என்ற மலையை வசந்த ருதுவில் சித்திரை மாதத்தில் ஞாயிறு தினத்தில் அத்த நட்சத்திரமும் விருத்தி யோகமும் கூடிய பௌர்ணமி திதியில், திரி கூட மலையின் வட பாகத்தில் அம்மலையை வாயுபகவான் வைத்தார். அன்று முதல் இம்மலை தெட்ஷண கைலாசம் என பெயர் பெற்றது. இதற்கு வெள்ளி மலை தரிகூடம் தரிகோணமலை திருக்கோணமலையென அழைக் கப்பட்டு வந்துள்ளது.

இத்திரிகோண பீடத்தில் 9 வீதிகள் அமைந் திருப்பதாகவும், ஒவ்வொரு வீதியும் ஒவ்வொரு வகை சிறப்புகளைக் கொண்டதாகவும் வாயு புராணம் இயம்புகிறது.

இத்தகைய சிறப்புக் கொண்ட ஆலயம் பல கடல் கோள் அழிவுகளுக்கு அகப்பட்டு பல காலங்களில் புனரமைப்புச் செய்யப்பட்டதாகவும், அவ்வகையில் கி. முன் 3544 ல் ஏற்பட்ட கடல் கோள் காரணமாகவும், உதாரணமாக சுமார் 12000 ஆயிரம் வருடங்களுக்கு முன்னும் 7000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னும் 5000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னும் சுமார் 5 கடல் கோள்கள் ஏற்பட்டதன் காரணமாக ஆலயம் அழிக் கப்பட்டதாக வெசினரும், டெனற் என்பவரும் ஆதாரங்களுடன் நிறுவியுள்ளனர். இன்னொரு ஆய்வின் படி முதலாவது கடல்கோள் கி. மு 2378 லும் இரண்டாவது கடல் கோள் கி. மு 504 ஆம்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# சுதந்திரக் காற்றை சுவாசிக்காத மலையக மக்கள்



துரைசாமி நடராஜா

இலங்கையின் 77 வது சுதந்திர தினம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ம் திகதி கொண்டாடப்படவுள்ளது. இது ஒரு சிறப்பம்சமே எனினும் சுதந்திரத்தின் உண்மையான அர்த்தத்தை இலங்கையர்கள் புரிந்து கொண்டார்களா? இதனால் ஏற்பட்ட விளைவுகள் எத்தகையன? என்பது தொடர்பில் நாம் ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளது. அதிலும் இலங்கையில் சீந்துவாரின்றி சிறுபான்மை சமூகமாக வாழும் மலையக மக்கள் சுதந்திரத்தின் உண்மையான சாதக விளைவுகளைப் பெற்றுக் கொண்டார்களா? என்பது தொடர்பில் நாம் நோக்குவது மிகவும் பொருத்தமாகும்.

இலங்கை அந்நிய ஏகாதிபத்தியத்தில் இருந்து விடுபட்டு 77 வருடங்கள் ஓடி மறைந்து விட்டன. 'ஒரு நாடு அந்நிய ஏகாதிபத்தியத்தில் இருந்து விடுபட்டு சுதந்திரமாக செயற்பட போகின்றது எனும்போது அது ஒரு முன்னேற்றகரமான புதிய பாதையில் பயணிக்கப் போகின்றது என்பது பொதுவான எதிர்பார்ப்பாகும். எனினும் இலங்கையின் நிலைமைகளோ இதனை மறுதலிப்பதாகவே உள்ளன' என்பது புத்திஜீவிகளின் கருத்தாக உள்ளது. காலனித்துவ ஆட்சியிலும் மோசமான நவகாலனித்துவம் சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையில் நிலவுவதாகவும் இவர்கள் மேலும் குறிப்பிடுகின்றனர்.

குறிப்பாக சிறுபான்மை மக்களை எடுத்துக் கொண்டால் சுதந்திரத்துக்கு முன்னர் ஒடுக்கப்பட்ட நிலையில் இருந்த இம்மக்களின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றகரமான வெளிப்பாடுகளை அதிகளவில் காண முடியவில்லை. ஆட்சியாளர்கள் இவர்களின் அபிவிருத்தி கருதி 'அள்ளிக் கொடுக்கா விட்டாலும் கிள்ளிக் கொடுப்பதற்குக்' கூட தயக்கம் காட்டுகின்றமை யாவரும் அறிந்த விடயமாகும்.

### இனவாத தாக்குதல்

இதனிடையே சிறுபான்மையினர் என்ற ரீதியில் மலையகமக்கள்குறித்து நாம் நோக்குகின்றபோது இம்மக்கள் தொடர்ச்சியாகவே இலங்கையின் வரலாற்றில் இன்னல்கள் பலவற்றையும் அனுபவித்தவர்களாகக் காணப்படுகின்றனர். 1920ம் ஆண்டின் பிற்பகுதியில் சர்வசன வாக்குரிமை பற்றியும் அரசியல் யாப்பு சீர்திருத்தங்கள் பற்றியும் விவாதங்கள் நடந்தபோது தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான இனவாதிகளின் தாக்குதல் ஆரம்பித்ததாக புத்திஜீவிகள் சுட்டிக்காட்டுகின்றனர். தோட்டத் தொழிலாளர்கள் இலங்கையின் பொருளாதாரத்துக்கு இன்றியமையாதவர்கள். ஆனால் அரசியல் செயற்பாடுகளுக்கு அல்ல. அடிமைகளுக்கு சமமாக அவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டனர்.

ஆனால் அவர்கள் வாக்குரிமை பெற்று தேர்தல் முடிவுகளில் செல்வாக்கு செலுத்திய தேர்தல் தொகுதிகளில் சிங்களவர் சிறுபான்மையாகிவிடுவர் என்ற அச்சத்தை இனவாத சிந்தனையாளர்கள் தமது பிரசார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தினர். சர்வசன வாக்குரிமை தொடர்பான பிரச்சினை குறிப்பாக பெண்களுக்கும், இந்திய தொழிலாளர்களுக்கும் வாக்களிக்கும் உரிமை பற்றிய பிரச்சினை 1928 ம் ஆண்டு மிகுந்த வாத பிரதிவாதங்களை ஏற்படுத்தி இருந்தது. சட்ட நிர்வாக சபையில் சிங்களவரின் பிரதிநிதி ஒருவரைத் தவிர,ஏனைய அங்கத்தவர்கள் அனைவரும் இந்தியருடைய வாக்குரிமையால் அரசியல் ரீதியாக செயலற்று போய்விடுவோம் என்று வெளிப்படையாக தெரிவித்திருந்தனர். டொனமூர் ஆணைக்குழுவினுடைய சிபாரிசில் அபாய அறிவித்தலாக அமைந்தது, இந்திய தொழிலாளருக்கு வாக்குரிமையளிக்கும் பிரேரணை என டி.எஸ்.சேனநாயக்கா தெரிவித்தார். இந்தியாவை பொறுத்தவரையில் சிங்களவர் சிறுபான்மையினர் மாத்திரமின்றி அநீதிக்கு பலியாவார்கள் என்றும் கூறினார்.



'கொழும்பில் வசிக்கும் இந்தியரைக் காட்டிலும் தோட்டத்துக்கு கூலிக்கு நான் மிகவும் அஞ்சுகிறேன். இந்தியத் தொழிலாளி காலையில் 6 மணிக்கு வேலைக்குப் போய் மாலை 6 மணிக்கே தனது கூலி லயன்களுக்கு திரும்புகின்றான். இலங்கைத் தீவில் நிகழ்வன குறித்து அவனுக்கு என்ன தெரியும்? எனவே அரசியல் விடயங்களில் வாக்களிக்கும் தகைமை அவனுக்கு இல்லை என்றே கூறுவேன் 'என்று பாராளுமன்ற உறுப்பினர் வி.டி.எஸ்.விக்கிரமநாயக்க தெரிவித்திருந்தார். இந்திய வம்சாவளி மக்களுக்கு வாக்குரிமை வழங்குவதென்பது பலருக்கு கசப்பான ஒரு விடயமாகவே இருந்தது. எவ்வாறெனினும் பல்வேறு இடையூறுகளுக்கும் மத்தியில் இம்மக்கள் வாக்குரிமையை பெற்றுக் கொண்டமையானது ஒரு வரலாற்று நிகழ்வேயாகும். இவ்வாறாக அரசியல் ரீதியாக இந்திய வம்சாவளி மலையக மக்கள் ஒதுக்கப்பட்டது மட்டுமன்றி சமூக, சுகாதார, மருத்துவ, இருப்பிட நிலைமைகளிலும் அம்மக்கள் பின்தங்கிய வெளிப்பாடுகளையே கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### மறுபக்க விளைவு

இதனிடையே இலங்கை நாடு சுதந்திரம் அடைந்த பின்னரும் அம்மக்கள் அனுபவித்த இன்னல்களுக்கு ஒருபோதும் குறைவு இருக்கவில்லை. 1947 ம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மலைநாட்டில் 7 தொகுதிகளில் இந்தியத் தொழிலாளர்கள், இந்திய காங்கிரஸ் பிரதிநிதிகளை அரசாங்க சபைக்கு தெரிவு செய்ததுடன் ஏனைய 17 தொகுதிகளில் வலது சாரிகளை எதிர்த்து இடதுசாரிகளையே ஆதரித்திருந்தனர். மொத்தம் 96 இடங்களில் 43 இடங்களில் வெற்றி பெற்று வலதுசாரிக் கட்சி மிகக்குறைந்த பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்தது. இத்தகைய நிலைக்கு முடிவு கட்டுவதற்கு ஒரு பரிகாரமாக வலதுசாரிகளுக்கு சவால் விடுக்கின்ற இந்திய மக்களின் பிரஜாவுரிமையை நிறுத்துவது சிறந்த முறையாக கருதப்பட்டது. சர்வதேச ரீதியாக 20 ம் நூற்றாண்டில் இடம்பெற்ற சிறுபான்மை இனங்களுக்கு எதிரான சமுதாய உரிமையை சட்ட ரீதியாக இல்லாமல் செய்தது இலங்கையின் சுதந்திரத்தின் மறுபக்க விளைவாகும். இதன் மூலம் சுமார் 90,000 பேருக்கு பிரஜாவுரிமை மறுக்கப்பட்டது. இதனால் இவர்கள் நாடற்றவர்கள் என்ற நிலையிலும் இலங்கையில் அரசியல் அதிகாரம் இல்லாத அநாதைகள் ஆகவும் வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டமை வருந்தத்தக்க ஒரு விடயமேயாகும்.

1948ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி இந்திய வம்சாவளி மக்களின் எழுச்சி தொடர்பில் அச்சமடைந்து இம்மக்களின் வாக்குரிமை மற்றும் பிரசாவுரிமை என்பவற்றை பறித்தெடுத்து அரசியல் ரீதியாக அவர்களை நிர்வாணப்படுத்தியது. இச்செயல் மிகுந்த பாதக விளைவுகளுக்கு வித்திடுவதாக அமையும் என்று பலரும் சுட்டிக்காட்டி இருந்தனர். எனினும் ஐக்கிய தேசியக் கட்சி தனது பிடிவாதத்தால் இம்மக்களை வஞ்சம் தீர்த்துக் கொண்டது. இதனால் ஏற்பட்ட தழும்புகள் இன்றும் கூட இந்திய வம்சாவளி மலையக மக்களின் வாழ்வில் எதிரொலிப்பதாக உள்ளது. இந்நிலையில் 1988ம் ஆண்டிலேயே பறிக்கப்பட்ட வாக்குரிமையையும் பிரசாவுரிமையையும் இந்திய வம்சாவளி மக்கள் பெற்றுக் கொண்டனர். இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் இதற்கு உந்துசக்தியாக இருந்தார். தொண்டமானின் சாதனையை இமய சாதனையாக வர்ணித்து பத்திரிகைகள் பலவும் புகழாரம் சூட்டி இருந்தன.

### பிரதிநித்துவ வீழ்ச்சி

1956 ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தனிச்சிங்கள சட்டம் மலையக மக்களுக்கு மட்டுமன்றி முழு தமிழ் சமூகத்துக்கும் பலத்த அடியாக அமைந்தது. அரச தொழில் வாய்ப்புகளில் ஆதிக்கம் செலுத்திய தமிழ் மக்களின் வீதம் வெகுவாக வீழ்ச்சி கண்டது. இது இனவாத சிங்கள அரசியல்வாதிகளின் திட்டமிட்ட ஒரு செயற்பாடாகும். தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிக் கொள்கையை முன்னதாக ஆதரித்த அப்போதைய பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க போன்றவர்கள் பின்னர் அரசியல் இலாபத்தை கருத்தில் கொண்டு தனிச் சிங்கள சட்டத்துக்கு வலுசேர்த்திருந்தனர். சுதந்திரத்தின் பின்னர் செய்து கொள்ளப்பட்ட

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# மேற்குலகில் தமிழும் தமிழ் மரபுத் திங்களும்

### தமிழின் மகத்துவமும் தமிழ் மரபும்:

உலகில் தோன்றிய மூத்த மாந்த இனங்களுள் பண்பட்ட பண்பாடும் காலத்தால் முந்திய கலாச்சாரமும் நவீனமும் வியக்கும் நயமான நாகரிகமும் நீண்டு நெடிய நன்மரபும் கொண்ட நம் தமிழினம் பாரெங்கும் பரவி வாழ்வது யாவரும் அறிந்ததே. அவ்வாறு அகிலமெங்கும் பரந்து வாழும் எம் மக்கள் தாம் வாழும் இடங்களில் உள்ள ஏனைய மக்களுடன் கூடி வாழும் இயல்பு கொண்டோராய் அன்பையும் பண்பையும் பகிர்ந்தளித்துப் பரவசமாக வாழ்கின்ற தன்மையுடையோராய் விளங்குகின்றனர். காலத்திற்குக் காலம் பல்வேறுபட்ட காரணங்களினால் தாய் மண்ணை விட்டுக் குடிபெயர்ந்த தமிழ் மக்கள் தமது பொருட் செல்வத்தைத் தம்முடன் கொண்டு சென்றார்களோ இல்லையோ தம் நல்லியல்புகளையும் பண்பாட்டையும் தமக்கே உரித்தான நன்மரபையும் தம்மோடு கொண்டு செல்ல மறப்பதில்லை. அதனாற்றான் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளானாலும் தமிழ் தன் தரமும் மணமும் மாறாது மங்காத மணி விளக்காய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. தாயையும் தாய் மண்ணையும் தாய் மொழியையும் ஒரே தரத்தில் வைத்துப் பார்க்கும் நல்லியல்பு கொண்ட தமிழர் எங்கிருந்தாலும் இவற்றின் மீதான பற்றையும் பாசத்தையும் வளர்ப்பார்களேயன்றி மறக்கமாட்டார். அதன் விளைவாகவே தமிழ் எனும் வார்த்தையை உச்சரிக்கும் ஒவ்வொரு தமிழனும் பெருமிதமும் புளகாங்கிதமும் அடைகிறான்.

மரபு என்பது மனிதனிடம் இருந்து பிரிக்க முடியாத ஒன்றாக மாந்த உடலோடும் உயிரோடும் இணைந்து அவர்தம் சொல்லாலும் செயலாலும் வெளிப்படுத்தப்படுவதாக விளங்குகிறது. தமிழ் மரபும் அவ்வாறே பிறப்பால் தமிழர் பெற்றுக் கொண்ட சொத்து. இதனைக் காலம் உள்ளவரை கருத்தோடு காக்க வேண்டியது தமிழர்தம் கடமையும் அகத்தியமுமாகும்.

### மேற்குலகில் தமிழர் மரபு:

மேற்குலகு நோக்கி குடிபெயர்ந்த தமிழர் ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, அவுத்திரேலியா, ஆபிரிக்க நாடுகளில் குடியேறினர். இவர்களில் ஐரோப்பிய நாடுகளை நோக்கிச் சென்றவர்கள் பிரித்தானியாவில் குடியேறவே பெரிதும் விரும்பினர். இவர்கள் தமக்கே உரிய மரபு வழி நின்று தமது கலை, கலாசாரம், பழக்கவழக்கம், பண்பாடுகளைப் பேணத் துடித்தனர். அதன்வழி கோயில்கள், சமூக தொண்டு நிறுவனங்கள், தமிழ்ப் பாடசாலைகள் போன்றன உருவாகின. இவற்றினூடே தமிழொடு கலையும் பண்பொடு பண்பாடு கலாசாரமும் மரபுவழி விழுமியங்களும் வளர்க்க முனைந்தனர். அத்தோடு இவர்கள் தொடர்ந்தும் சமய விழாக்கள், விரதங்கள், பண்டிகைகள், திருமணவிழா, புதுமனைபுகுவிழா போன்ற விழாக்களையும் தமது பாரம்பரிய முறைப்படி கொண்டாடிவருகின்றனர்.

மேற்குலகில் அவுத்திரேலியா, கனடா, பிரித்தானியா போன்ற நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் அந்நாடுகளில் தமக்கென ஒரு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளவும் தமிழ் மரபினைப் பேணுமுகமாகவும் 'தை தமிழ் மரபுத் திங்கள்' என்னும் செயற்பாட்டை முன்னெடுத்து அந்நாட்டு அரசுகளினதும் மக்களினதும் அனுமதி பெற்று தற்போது தை மாதத்தை தமிழ் மரபு மாதமாகப் பிரகடனப்படுத்தி விழாவெடுத்துக் கொண்டாடுகிறார்கள்.

### பிரித்தானியா வோல்த்தம் பொறஸ்ட் பகுதியில் தமிழரும் 'தை தமிழ் மரபுத் திங்கள்' விழாவும்:

உள்ள தமிழ் அமைப்புகளான வோல்த்தம்ஸ்ரோ ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம், ஸ்ரீ மேருபுரம் பத்திரகாளி அம்மன் ஆலயம், இமானுவல் கிறிஸ்தவ ஐக்கிய சபை, தமிழ்க் கத்தோலிக்க திருச்சபை சிங்வொர்ட், தமிழ் மூத்தோர் சங்கம், ஸ்ரீ சத்திய சாய் வோல்த்தம் பொறஸ்ட், வோல்த்தம்பொறஸ்ட் தமிழ்ச் சங்கம் என்பன இணைந்து வோல்த்தம் பொறஸ்ட் மாநகர சபையின் ஆதரவுடன் தமிழர் விழா, தமிழ்க் கலாசார தினம் போன்ற நிகழ்வுகளை நடாத்திவருவது மிகவும் போற்றுதற்குரிய விடயமாகும். இந்த ஏழு அமைப்புகளும் ஒன்றிணைந்து, வோல்த்தம் பொறஸ்ட் மாநகர சபையின் அங்கீகாரம் பெற்று கடந்த மூன்று ஆண்டுகளாக இப்பகுதியில் 'தை தமிழ் மரபுத் திங்கள்' விழாவினை மிகவும் கோலாகலமாகக் கொண்டாடிவருகிறார்கள். *2025 ஆம் ஆண்டுக்கான தமிழ் மரபுத் திங்கள் விழாவானது 25/01/2025 அன்று 'ஸ்ரீ சத்திய சாய் சேவா வோல்த்தம் பொறஸ்ட்' அமைப்பின் தலைமையில் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.*

வோல்த்தம் பொறஸ்ட் பகுதியில் இடம் பெறும் தமிழ் மரபுத் திங்கள் விழாவானது காலையில் முற்றத்துப் பொங்கல், மதியம் தமிழின் தொன்மை பற்றிய கண்காட்சி, மாலை கலை நிகழ்ச்சிகள் என்னும் அடிப்படையில் இடம் பெறுவது வழக்கம். இவ்வாண்டும், காலையில் இடம்பெற்ற முற்றத்துப் பொங்கல் கும்மி, உறியடி, பொய்க்காற் குதிரை போன்ற பாரம் பரிய நிகழ்ச்சிகளுடன் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந் நிகழ்வுகளில் சிறுவர்களும் இளையோரும் பெண்களும் ஆண்களும் என அனைத்து மக்களும் வயது வேறுபாடின்றி மிகவும் ஆர்வமாகப் பங்கெடுத்துக் கொண்டதைக் காணக்கூடியதாக இருந்தது.





**திருமதி. சுரந்தினி ரமேஸ்**
B.A (HONS) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பிரித்தானியா வோல்த்தம் பொறஸ்ட் பகுதியில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தமக்கென ஓர் அடையாளத்தை ஏற்படுத்தவும் தமது மரபு மாறாது பேணிக்காக்கவும் தம்மாலான அனைத்து முயற்சிகளிலும் ஈடுபடுவது வழக்கம். அந்த வகையில் இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சைவ / இந்துக் கோயில்கள், சமய நிறுவனங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், சபைகள், சமூக தொண்டு நிறுவனங்கள் வாயிலாகத் தமிழும் தமிழர்தம் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களும் பேணப்பட்டு அடுத்த தலைமுறையினருக்கும் கடத்திச் செல்லப்படுவது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

ஆரம்ப காலங்களில் பிரித்தானியா வாழ் தமிழர் மத்தியில் 'தைப்பொங்கல்' ஓர் சமய நிகழ்வாக இடம்பெற்று பின்னர் தமிழர் விழா'வாகக் கொண்டாடப்பட்டுவந்தது. வோல்த்தம் பொறஸ்ட் பகுதி வாழ் தமிழ் மக்களை ஒன்றிணைப்பதில் வோல்த்தம் பொறஸ்ட் தமிழ்ச் சங்கம் முக்கிய பங்காற்றிவருவதுடன் ஏனைய தமிழ் அமைப்புகளையும் ஒன்றிணைத்து செயலாற்றி வருவது குறிப்பிட்டுக் கூறத்தக்கதொன்றாகும். கடந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலாக இப்பகுதியில்

பின்னர் மதியம் இடம்பெற்ற தமிழர் தொன்மை பற்றிய கண்காட்சியில் தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழில் ஒலி வடிவ எழுத்துகள் தோற்றம் பெறும் இடங்கள் பற்றியும் தற்காலத்தில் விஞ்ஞானரீதியாக நிரூபிக்கப்படுவது பற்றியும் விளக்கிக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன் அண்மைய ஆய்வுகளில் கிடைக்கப்பெற்ற ஆதாரங்களின் அடிப்படையில் தமிழில் வரி வடிவ எழுத்துருவாக்கம் அவற்றின் காலங்கள் போன்ற விடயங்கள் விளக்கப்பட்டிருந்தன. இன்னுமொரு பகுதியில் நாட்டியக் கலை பற்றிய கண்காட்சி இடம்பெற்றது. இந்தக் கண்காட்சியானது மொழிக்கும் கலைக்கும் அறிவு சார்ந்த விளக்கமளிப்பதாக அமைந்திருந்தது.

தொடர்ந்து மாலையில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அறு சுவையும் ஒரு விருந்தில் வைப்பதே முறையெனக் கொண்டது தமிழ் மரபு.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# அமெரிக்காவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்திய டீப்சீக் (Deepseek) செயற்கை நுண்ணறிவுச் செயலி

தமிழில்: ஜெயந்திரன்

**பகுதி 1**

இரண்டு வருடங்கள் தொடர்ச்சியாக அமெரிக்காவைச் சேர்ந்த செயற்கை நுண்ணறிவை முன்னெடுக்கும் நிறுவனங்கள் எந்தவித போட்டியுமில்லாமல் வெற்றிநடை போட்டுக் கொண்டிருந்தன.

செயற்கை நுண்ணறிவுத் தளத்தில், முன்னோடி நிறுவனமாகத் திகழ்கின்ற ஓப்பிண் ஏஐ *(Open AI)* நிறுவனம், பல பில்லியன்கள் பெறுமதியான முதலீடுகளை தன்னகத்தே ஈர்க்கக்கூடியதாக இருந்தது. எவ்வளவு பெரிதாக இருக்கிறதோ அவ்வளவுக்கு அது சிறப்பானதாக இருக்கும் என்ற கொள்கையை இந்த நிறுவனம் கொண்டிருந்தது. முன்னரை விட அதிக தரவுகள், பெரிய மாதிரிகள், அதிக கணிக்கும் வலு போன்றவை *ChaptGPT* போன்ற உற்பத்திப் பொருட்களின் உருவாக்கத்துக்கு இட்டுச்சென்றது.

இந்த வேளையில் தான் டீப்சீக் உள்ளே நுழைந்தது. ஒரு சீன நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட இந்த செயற்கை நுண்ணறிவுப் படைப்பு, கடந்த வார இறுதியில் எல்லா செயலிகளையும் வீழ்த்தி முதலிடத்துக்குச் சென்றது. ஓப்பிண் ஏஐ நிறுவனம் கடைசியாக உருவாக்கிய செயற்கை நுண்ணறிவுச் செயலிக்குப் போட்டியாக இது உருவாக்கப்பட்டது என்று குறித்த நிறுவனம் கருத்துத் தெரிவித்தது. தமது செயலி ஒப்பீட்டளவில் குறைந்த செலவுடனும் குறைவான கணிப்புத்திறனுடனும் உருவாக்கப்பட்டதாக அந்த சீன நிறுவனம் சுட்டிக்காட்டியது.

மேற்குறிப்பிட்ட சீன நிறுவனத்தின் கருத்துகளும் அதே வேளையில் அவர்கள் உருவாக்கிய செயலியின் பிரபல்யமும் வோஷிங்டனில் குறிப்பாக சிலிக்கன் பள்ளத்தாக்கிலும் வோல்ஸ்ற்றீற்றிலும் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. விரும்பியவர்கள் குறிப்பிட்ட செயலியைத் தரவிறக்கம் செய்து, பயன்படுத்தவும் அதில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய வகையிலும் ஏற்ற வழிவகைகளை டீப்சீக் செய்திருந்தது.

இந்த செயலியின் வருகையால் கடுங்குழப்பத்துக்கு உள்ளாகிய அமெரிக்க அதிகாரிகள், பொறியாளர்கள், முதலீட்டாளர்கள் ஆகியோர் செயற்கை நுண்ணறிவுத் துறையில் சீனாவுக்குப் போட்டியாக தாம் எவ்வாறு செயற்படுவது தொடர்பாக முற்றிலும் புதிய வகையில் சிந்திக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்.

### செயற்கை நுண்ணறிவுப் போட்டியில் சீனா வெற்றிபெறுகிறதா?

செயற்கை நுண்ணறிவுத் துறையில் சீனாவை ஒரு கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்று குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ஒரு சிலரும் ட்ரம்ப் நிர்வாகத்தினரும் எண்ணிய பொழுதிலும், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை மூடிவைக்காமல், எவரும் அதனைப் பயன்படுத்தக்கூடிய வகையில் அந்த தொழில்நுட்பத்தைப் பகிர்ந்துகொள்வதால் உருவாகக்கூடிய நன்மைகளை டீப்சீக்கின் வெற்றி உணர்த்தியிருக்கிறது என்று குறிப்பிட்ட துறையில் முன்னணி வகிப்போர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையேயான போட்டியில், செயற்கை நுண்ணறிவு ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. காரணம் என்னவென்றால், இதில் எந்த நாடு பொருண்மியத்திலும் இராணுவ வளங்களி லும் உயர்நிலை வகிக்கிறது என்பதை செயற்கை நுண்ணறிவே எதிர்காலத்தில் தீர்மானிக்கப்போகிறது.




தொழில்நுட்பத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியை செயற்கை நுண்ணறிவே தீர்மானிக்கப்போகிறது என்று அமெரிக்காவிலும் சீனாவிலும் உள்ள தொழில்நுட்ப வல்லுநர்கள் கருதுகிறார்கள். நீராவி இயந்திரம் அல்லது கணினி ஆகியவற்றின் வருகை எவ்வாறு தொழில்நுட்பத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியதோ அவ்வாறே செயற்கை நுண்ணறிவும் சமூக வாழ்வில் தாக்கம் செலுத்தும் என்றும், இது பல புதிய வர்த்தகர்களையும் பல புதிய வர்த்தக நிறுவனங்களையும் உருவாக்கப் போகிறது என ஆரூடம் தெரிவிக்கின்றனர். புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சீனச் செயலி, அமெரிக்காவுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது என்று கடந்த திங்கட்கிழமை அதிபர் ட்ரம்ப் கருத்தை வெளியிட்டிருந்தார்.

ஒரு சீன நிறுவனம் வெளியிட்டிருக்கும் இந்த டீப்சீக் என்ற செயற்கை நுண்ணறிவுச் செயலி, குறிப்பிட்ட துறையில் உள்ள எமது நிறுவனங்களை விழிப்படைய வைத்திருக்கிறது என்றும், இந்தப் போட்டியில் வெற்றியை ஈட்டுவதற்கு அமெரிக்க நிறுவனங்கள் மிகவும் முனைப்பாகப பணியாற்ற வேண்டும் என்றும் ட்ரம்ப் புளோரிடாவிலுள்ள டோறல் என்ற இடத்தில் பேசும் போது தெரிவித்தார். சீனாவின் மேல் கடுமையான வரிகளை இடுவது செயற்கை நுண்ணறிவு தொடர்பான போட்டியில் அமெரிக்காவுக்கு வெற்றியைத் தருமா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

சீனாவின் இந்தத் தயாரிப்பு அமெரிக்காவைப் பொறுத்தவரையில் சாதகமான ஒரு விடயம் என்று திங்கட்கிழமை ஊடகவியலாளருடன் உரையாடும் பொழுது ட்ரம்ப் குறிப்பிட்டார். குறைந்த செலவில் அந்த செயலி கிடைக்குமானால் எமக்கு அது சாதகமாகவே இருக்கும். டீப்சீக்கையும் தோற்கடிக்கக்கூடிய செயலிகளை அமெரிக்கா மிக விரைவில் உருவாக்கும் என்றும் அவர் மேலும் கூறினார். இதில் நாங்கள் தான் ஆட்சி செலுத்துவோம். ஏன் எல்லாவற்றிலுமே நாங்கள் தான் ஆட்சி செலுத்துவோம் என ட்ரம்ப் முழங்கினார்.

ஒழுங்குவிதிகளில் மாற்றங்களை ஏற்படுத்தி, பெருந்தொழில் நுட்ப நிறுவனங்களுக்குத் தேவையான பல பில்லியன் டொலர்கள் பணத்தை வழங்குவதன் மூலம் செயற்கை நுண்ணறிவுத் துறையில் அமெரிக்காவை முதலிடத்தில் வைத்திருக்கலாம் என்ற கருதுகோளுக்கு டீப்சீக்கின் வருகை கடும் சவாலை முன்வைத்திருக்கிறது.

தனது அங்குரார்ப்பண நிகழ்வில் மிக முக்கிய ஆசனங்களை தொழில்நுட்பத் துறையில் முன்னணி வகிப்போருக்கு வழங்கியன் மூலமாக, தனது இரண்டாவது பதவிக்காலத்தில் இவ்வாறானவர்களுக்க முன்னுரிமை வழங்கப்படும் என்ற செய்தியை ட்ரம்ப் சொல்லியிருக்கிறார். செயற்கை நுண்ணறிவுத் துறையைக் கட்டுப்படுத்துவதற்கு 2023ம் ஆண்டில் முன்னைய அதிபர் ஜோ பைடன் அறிவித்த நிறைவேற்றுக் கட்டளையை மீளப்பெற்ற ட்ரம்ப், இவ்வாறான சட்டங்கள் குறிப்பிட்ட துறையின் வளர்ச்சியின் வேகத்தைக் குறைக்கும் என வாதிட்டார்.




கடந்த வாரம், வெள்ளை மாளிகையில் வைத்து, ஓப்பிண் ஏஐ நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான சாம் ஒல்ற்மானுக்கும் *(Sam Altman)* ஏனைய தொழில்நுட்ப துறையில் முன்னணி வகிக்கும் தலைவர்களுக்கும் விருந்தளித்த அதிபர் ட்ரம்ப், அமெரிக்கா முழுவதும் செயற்கை நுண்ணறிவுத் தரவுமையங்களைத் திறப்பதற்காக

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# சிலிக்கன் வலிக்குள் சீனா வீசிய அணுக்குண்டு



அமெரிக்காவின் அரச குடும்பம்(Royal Family) என அழைக்கப்படும் சிலிக்கன் வலி(Silicon Valley) முதலாளிகளின் கூடாரத்துக்குள் அணுக்குண்டு ஒன்று வெடித்தது போன்ற நிகழ்வு ஒன்று கடந்த வாரம் ஏற்பட்டிருந்த தாக மேற்குலக ஊடகம் ஒன்று சீன நிறுவனத்தின் ஆழ் தேடல்(DeepSeek) எனப்படும் புதிய செயற்கை நுண்ணறிவின் வரவை விபரித்திருந்தது.



சீனாவின் 40 வயதான செயற்கை நுண்ணறிவு தொடர்பான பொறியியலாளர் Liang Wenfeng கடந்த வாரம் வெளியிட்ட இந்த செயற்கை நுண்ணறிவு தளம், தற்போது உலகில் கொடிகட்டி பறக்கும் திறந்த செயற்கை நுண்ணறிவு (Open AI) எனப்படும் சாம் ஒல்ட்மனின் தளத்தை விட மிகவும் சிறப்பாகவும், அதன் செலவில் 0.1 விகித்திலும் குறைவான செலவுடனும் செயற்பட்டது உலகத்தை ஒரு கணம் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருந்தது.

Open AI, Google, Meta, Alphabet போன்ற நிறுவனங்கள் 60 பில்லியன் டொலர்கள் செலவில் மிக அதிக மற்றும் நவீன மென்கடத்திகளை (GPU semiconductors) பயன்படுத்தி மிக அதிக எரிசக்திச் செலவில் தயாரிக்கும் இந்த செயற்கை நுண்ணிவை சீனாவின் இளம் விஞ்ஞானி மிகவும் தரம் குறைந்த மென்கடத்திகளுடன், 5.6 மில்லியன் டொலர்கள் செலவில் தயாரித்தது என்பது செயற்கை நுண்ணறிவுத் தளத்தில் தமது முதலீடுகளைப் போட்ட செல்வந்தர்களை தடம்புரள வைத்திருந்தது.




2008 ஆம் ஆண்டுக்கு பின்னர் அமெரிக்காவின் பங்குச்சந்தை கடந்த திங்கட்கிழமை(27) மிகப்பெரும் இழப்பைச் சந்தித்திருந்தது. இது அமெரிக்காவின் பங்குச்சந்தை வரலாற்றில் சந்தித்த மிகப்பெரும் இழப்பு என வர்ணிக்கப்படுகின்றது. என்விடியா எனப்படும் மென்க்கடத்திகளை தயாரிக்கும் நிறுவனத்தின் பங்குகள் 17 விகித வீழ்ச்சியை கண்டதுடன், அது 600 பில்லியன் டொலர்களை ஒரு நாளில் இழந்திருந்து.

அது மட்டுமல்லாது நஸ்டக், அப்பிள், ரெஸ்லா என பல நிறுவனங்களும் கடும் இழப்பை சந்தித்திருந்தன. ஒட்டுமொத்த இழப்பு 1.2 றில்லியன் டொலர்கள் என மதிப்பிடப்பட்டிருந்தது. அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட 500 செல்வந்தர்களும் 108 பில்லியன் டொலர்களை ஒரே நாளில் தொலைத்திருந்தனர். தொழில்நுட்ப வளர்ச்சி தொடர்பான அமெரிக்காவின் 15 வருட பங்கு சந்தையின் வளர்ச்சி என்ற நீர் குமிழை சீனாவின் இந்த சிறிய நிறுவனம் ஒரே நாளில் உடைத்துவிட்டது. எதிர்வரும் வருடங்களில் செயற்கை தொழில்நுட்பம் மீதான மேற்குலகத்தின் ஆளுமை கடும் வீழச்சியை சந்திக்கும் என தெரிவித்துள்ளார் புளும்பேர்க் ஊடகத்தை சேர்ந்த மார்க் குட்மோர்.

செயற்கை நுண்ணறிவு விநியோக தளங்கள் மற்றும் அதன் முன்னணி நிறுவனங்கள் தொடர்பில் முதலீட்டாளர்கள் பல சந்தேகங்களையும், கேள்விகளையும் எழுப்பும் நிலை ஒன்றை இந்த ஆழ்தேடல் உருவாக்கியுள்ளது என தெரிவித்துள்ளது மோர்கன் ஸ்ரான்லி வங்கியின் பங்குசந்தைப்பிரிவு.




சீனாவின் தொழில்நுட்பம் வளர்ந்தால் தமது தொழில்நுட்ப வியாபாரத்திற்கு மிகக்கடும் நெருக்கடிகள் ஏற்படும் என்பதால் என்வீடியா ஏற்றுமதி செய்யும் மென்க்கடத்திகளுக்கு அமெரிக்கா தடை விதித்திருந்தது. தரம் குறைந்த எச்-800 (H800 chips) என்ற மென்க்கடத்திகள் விற்பனை செய்யப்பட்டாலும் அதனையும் கடந்த வருடம் பைடன் அரசு தடை செய்திருந்தது.

எனினும் தடைக்கு முன்னர் தான் 10,000 - 50,000 மென்க்கடத்திகளை வாங்கி சேமித்ததாகவும், அதன் பின்னர் சீனாவின் தரம்வாய்ந்த பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்பத்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்ற ஏறத்தாழ 200 விஞ்ஞானிகளை ஒருங்கிணைத்து மிகவும் குறைந்த வளங்களுடன் மேற்குலக நாடுகளின் செயற்கை நுண்ணறிவைவிட தரம்வாய்ந்த தொழில்நுட்டபத்தை தாம் உருவாக்கியுள்ளதாக Liang தெரிவித்துள்ளார்.

## வேல்ஸில் இருந்து அருஸ்

மேற்குலக நாடுகளின் நிறுவனங்கள் 16,000 மென்கடத்திகளை பயன்படுத்தும் போது ஆழ்தேடல் 2,000 மென்கடத்திகளுடன் தனது பணியை முடித்துள்ளது. அதிக மின்சாரத்தை




உள்ளெடுக்கும் மேற்குலக நாடுகளின் தொழில்நுட்பத்தின் மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அணு மின்நிலையங்களை அமைப்பது தொடர்பில் மேற்குலக நிறுவனங்கள் சிந்தித்து வருங்கையில் மிகக்குறைந்த மின்சாரத்துடன் சீனா இந்த தொழில்நுட்டபத்தை வடிவமைத்துள்ளது.




அதாவது இந்த தொழில்நுட்டபத்தை மிகவும் செல்வந்த நாடுகள் மட்டும் தான் வடிவமைக்கமுடியும், அதற்கு பில்லியன் டொலர்கள் செலவாகும் என்ற நிலை மாறி 5 மில்லியன் டொலர்கள் இருந்தால் எந்த நாடும் அதனை எட்டிவிட முடியும் என்ற நிலை பல சிறிய நாடுகளையும், நிறுவனங்களையும் இந்த போட்டியில் குதிப்பதற்கு தூண்டியுள்ளது. உதாரணமாக சீனாவின் அலிபாபா என்ற மிகப் பெரும் நிறுவனமும் தாம் Qwen 2.5 என்ற செயற்கை நுண்ணறிவு தளத்தை உருவாக்கியுள்ளதாகவும் அது ஆழ்தேடல் போன்ற தரத்தில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

தொழில்நுட்ப ரீதியில் 2003 - 2007

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## கஷ்டப்பிரதேச... தொடர்ச்சி ...

ஒப்பந்தங்கள் காரணமாக கணிசமான இந்திய வம்சாவளி மக்கள் இந்தியா செல்ல நேர்ந்த நிலையில் இதனால் இம்மக்களின் செறிவு வீழ்ச்சி கண்டது. இது பல இடங்களில் இவர்கள் சார்ந்த அரசியல் பிரதிநிதித்துவத்தின் வீழ்ச்சிக்கும் ஏதுவானது என்றால் மிகையாகாது. சுதந்திரத்தின் பின்னர் மலையக மக்கள் பல்வேறு புறக்கணிப்பிற்கும் உள்ளான நிலையில் வடக்கு மக்களிலும் இதன் தாக்கம் எதிரொலித்தது. இது நாட்டில் பல்வேறு விளைவுகளுக்கும் வித்திட்டமையும் நீங்கள் அறிந்ததாகும்.

இந்திய வம்சாவளி மக்களை அடக்கியொடுக்கும் நோக்கில் காலத்துக்காலம் வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டமை இனவாதத்தின் இன்னொரு வடிவமாகும். 1956, 1958, 1960, 1981, 1983, 1986 என்று காலத்துக்குக் காலம் தாக்குதலுக்கு உட்பட்ட இந்திய வம்சாவளி தமிழர்களில் ஒரு பகுதியினர் இவற்றில் இருந்து தப்பிக்கொள்ளும் நோக்குடன் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு குடிபெயர்ந்தனர். மற்றுமொரு பகுதியினர் குறிப்பாக சிங்கள மக்கள் செறிவாக வாழுகின்ற காலி, மாத்தறை, இரத்தினபுரி, பலாங்கொடை பகுதிகளில் சிங்கள மக்களுடன் வாழ்வதற்கு அதீத பிரயத்தனங்களை மேற்கொண்டனர். தமது பேச்சு மொழியைக் கூட சிங்களமாகவோ அல்லது இலங்கையில் வாழுகின்ற இஸ்லாமியர்கள் பேசும் பேச்சுத் தமிழை வருந்தி உள்வாங்கிக் கொண்டு வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டனர்.

மலையக மக்களின் வீடமைப்பு நிலைமைகள் இன்னும் திருப்தி தருவதாக இல்லை. பல தொழிலாளர்கள் 150 வருடங்களுக்கு முன்னதாக கட்டப்பட்ட லயன் அறைகளில் இன்னமும் முடங்கிக் கிடக்கின்றனர். இந்த லயன் அறைகளில் பல வெடிப்புகளுடன் காணப்படும் நிலையில் உடைந்து விழும் அபாயத்தையும் எதிர்கொண்டுள்ளன. வீடமைப்புக்கு பொருத்தமற்ற நிலையில் பல இடங்களில் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் மண்சரிவு, வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களின் இலகுவாக தொற்றிக்கொள்ள இது வாய்ப்பாகி விடுகின்றது. கடந்த சில வருடங்களுக்கு முன்னர் பதுளை, மீரியபெத்த பகுதியில் பொருத்தமற்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்த லயன்கள் பல மண்சரிவுக்கு உள்ளானதால் அநேகமானோர் உயிர் மற்றும் உடைமைகளை இழக்கும் பரிதாபம் ஏற்பட்டதை இலகுவில் மறந்துவிட முடியாது. இதேவேளை மலையகத்தின் பல இடங்களில் பழைய லயன் அறைகளுக்கு பதிலாக புதிய வீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று தொழிலாளர்கள் தொடர்ச்சியாக குரல் எழுப்பி வருகின்றபோதும் இதனால் சாதக விளைவுகள் ஏற்படவில்லை.

### மாதச்சம்பளம் வேண்டும்

இலங்கை சுதந்திரமடைந்து 77 வருடங்கள் கடந்துள்ள போதும் மலையக மக்களின் மருத்துவம் மற்றும் சுகாதாரத்துறை இன்னும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. பெருந்தோட்டப்புற வைத்தியசாலைகளில் விரல் விட்டு எண்ணக்கூடியவை அரசாங்க வைத்தியசாலைகளாக தரமுயர்த்தப்பட்டுள்ள நிலையில் இன்னும் 90 வீதத்துக்கும் அதிகமான வைத்தியசாலைகள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றன. இம்மக்களின் பொருளாதார நிலைமைகளும் திருப்தி தருவதாக இல்லை. இந்நிலையில் மாதச்சம்பளத்தை இம்மக்களுக்கு வழங்க வேண்டும் என்று முக்கியஸ்தர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

சுதந்திரம் நாட்டிற்கு கிடைத்தபோதும் மலையக மக்களுக்கு உண்மையான சுதந்திரம் கிடைத்ததா? என்பது கேள்விக்குறியேயாகும். எவ்வாறாயினும் பல சுமைகளுடன் வாழ்ந்து வந்த சமூகம் சமகாலத்தில் ஓரளவு புதிய பரிமாணத்துடன் வளர்ச்சி கண்டு வருகின்றமை ஒரு மகிழ்ச்சியான விடயமாகும். இதனடிப்படையில் மலையக இளைஞர், யுவதிகளில் சிலர் அரசாங்க தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொண்டுள்ளனர். ஆசிரியர், கிராமசேவகர், கல்வியியலாளர்கள், முகாமைத்துவ உதவியாளர் எனப்பல பதவிகளும் இதில் உள்ளடங்கும். வைத்தியர்கள், பொறியியலாளர்கள், நிர்வாக அதிகாரிகள் என ஒரு சிலர் பதவி வகிப்பதும் மகிழ்ச்சிக்குரியதேயாகும். மலையக மக்களின் நலன் கருதி இந்திய அரசின் உதவியுடன் வீடமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் 'யானைப் பசிக்கு சோளப்பொறி' என்றவாறே நிலைமைகள் சென்று கொண்டிருக்கின்றன. வீடமைப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படுவதோடு இந்தியா , பிரித்தானியா போன்ற நாடுகள் இதற்கென தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். இந்திய வம்சாவளி மக்களை இந்தியாவில் இருந்து அழைத்து வந்தவர்கள் என்பதால் பிரித்தானியாவுக்கும் இதில் பங்குள்ளது. அத்தோடு இலங்கை அரசாங்கமும் மலையக மக்களின் வீடமைப்பு கருதி அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

இதேவேளை மலையக கல்வித்துறையும் ஓரளவு வளர்ச்சி கண்டு வருகின்றது. ஆரம்பக்கல்வித் துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டுள்ள நிலையில் இடைநிலை மற்றும் உயர்கல்வி இலக்குகள் இன்னும் உரியவாறு எட்டப்படவில்லை. பல்கலைக்கழகம் செல்லும் மலையக மாணவர்களின் தொகையில் இன்னும் அதிகரிப்பை ஏற்படுத்த வேண்டியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

• • •

## சிலிக்கன்... தொடர்ச்சி ...

ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் 64 தொழில்நுட்பங்களில் அமெரிக்கா 60 தொழில்நுட்பங்களை கொண்டிருந்தது. ஆனால் 2022 ஆம் ஆண்டு 64 தொழில்நுட்பங்களில் சீனா 52 தொழில்நுட்பங்களை கொண்டுள்ள நிலை ஏற்பட்டுள்ளது. மிகவும் செலவு குறைந்த ஆழ்தேடல் செயற்கை நுண்ணறிவின் வரவின் பின்னர் பிரித்தானியா பாடசாலைகளில் மாணவர்களுக்கு அது தொடர்பில் பயிற்சிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதாவது செல்வந்தர்களுக்கு மட்டும் பணம் சம்பாதிக்கும் தொழிலாக அல்லாது இது யாரும் எட்டிவிட முடியும் தொழில்நுட்பத்துறையின் ஜனநாயகப் புரட்சி என்கின்றனர் சிலர். அதாவது எல்லோரும் பயன்படுத்தும் ஒரு ஜனநாயகவழி திறக்கப்பட்டுள்ளது.

பூகோள அரசியல் ரீதியாக தொழில்நுட்பத்துறையில் அமெரிக்காவுக்கு இருந்த ஆளுமையை இது தகர்த்துள்ளது. அதாவது சீனா மீதான அமெரிக்காவின் தடைகளை மீறி சீனா தனது தொழில்நுட்பத்தை அமெரிக்காவுக்கு இணையாக வளர்த்துக்கொள்ள முடியும் என்பதையும், மென்கடத்திகளைக்கூட அது வருங்காலத்தில் உருவாக்கும் எனவும் இதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாது படைத்துறை ரீதியாகவும், எதிர்கால மோதல்கள் தொடர்பிலும் சீனாவின் இந்த தொழில்நுட்பம் அமெரிக்கா தலைமையிலான மேற்குலக கூட்டணிக்கு குறிப்பாக நேட்டோவுக்கு கடுமையான சவாலாக மாறியுள்ளது.

ஆளில்லாத தாக்குதல் மற்றும் உளவு விமானங்களை ஒருங்கிணைப்பது, கடற்பகுதியில் வரும் கப்பல்களின் தகவல்களைத் திரட்டி தம்மை தயார்படுத்துவது, எதிரிகளின் ஏவுகணைத் தாக்குதல் திட்டங்களை முன் கூட்டியே அறிவது, தமக்கு வரும் ஆபத்துகள் தொடர்பில் புலனாய்வுத்தகவல்களை திரட்டுவது என மிகப்பெரும் படைத்துறை நன்மைகளை இந்த செயற்கை நுண்ணறிவின் மூலம் பெறமுடியும். ஆனால் அது தற்போது மேற்குலகத்திற்கு மட்டுமானது அல்ல தெற்கு மண்டல நாடுகளும் அதனை இலகுவில் எட்டிவிடும் நிலையை அடைந்துள்ளன.

அமெரிக்காவின் பாதுகாப்புத் தலைமையகமான பென்ரகனின் பணியாளர்கள் மற்றும் படை அதிகாரிகள் கடந்த வருடத்தில் இருந்து ஆழ்தேடல் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி வந்ததாக புளூம்பேர் ஊடகம் தெரிவித்துள்ளது. தற்போது அதற்கான தடை கொண்டுவரப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் சீனாவின் இந்த வளர்ச்சி அமெரிக்காவின் தனிப்பெரும் வல்லாதிக்க நிலையின் மீது வீழ்ந்த மிகப்பெரும் அடியாகவே பார்க்கப்படுகின்றது. அமெரிக்காவின் புதிய அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற சில வாரங்களில் அமெரிக்கா தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரத் துறைகளில் கடும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவில் அமெரிக்கா முதன்மை பெறவேண்டும் என 500 பில்லியன் டொலர்களை அதாவது 5,000 மில்லியன் டொலர்களை அமெரிக்க அதிபர் ஒதுக்கிய சில நாட்களில் 5 மில்லியன் டொலர்களில் அமெரிக்க நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் தரத்தில் சீனா செயற்கை நுண்ணறிவை வெளியிட்டது. அமெரிக்காவின் நிதி முகாமைத்துவத்தின் மீது பலத்த சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது. அதாவது எதிர்வரும் வருடங்களில் மேற்குலகத்தின் தொழில்நுட்ப பொருளாதாரம் கேள்விக்குறியாவதுடன், இந்த புதிய தொழில்நுட்ப புரட்சி பல்முனைவாக்கப்பட்ட உலக ஒழுங்கையும் பலப்படுத்தும் என்பதே நிதர்சனமானது.

• • •

## மேற்குலகில்... தொடர்ச்சி ...

அதன்படி, இனிப்புடன் விருந்தினை ஆரம்பிப்பது போன்று, முழவும் பறையும் முழங்க உடுக்கை அதிர கொம்பொலி பிளிற பழந்தமிழர் இசைக் குழுவினையொத்த இன்னியம் என்றழைக்கப்படும் அணியுடன் கோலும் ஆலவட்டமும் அணிசெய சிறுவர் சிறுமிகளின் ஒயிலாட்டம் மங்கையரின் கோலாட்டம் மாதர்களின் ஆலவட்டம் தாங்கிய அணிகள் தொடர்ந்து வர இனிய இன்னிய வரவேற்புடன் விருந்தினர்கள் மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டனர். தமிழர் மரபில் தமக்காக ஈகம் செய்த வீரரையும் மக்களையும் நினைவுகூரும் நற்பழக்கம் ஒன்றுண்டு. அதன்படி அந்நிகழ்வும் அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றலும் இடம்பெற்றன.

அரங்க நிகழ்ச்சிகளாக கும்மி, கோலாட்டம், நாட்டிய நடனம், பாடல்கள், நாடகம் முதலிய பல கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. ஒவ்வொன்றும் மிகவும் திறம்பட ஒழுங்கமைக்கப்பட்டு கலைஞர்களின் திறமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. சிறுமிகளின் நடன நிகழ்ச்சிகள் பார்ப்பவர் கண்களுக்குப் பெருவிருந்தாய் அமைந்தன. நாடகத்தில் நடித்த சிறுவர் சிறுமியரின் நடிப்பாற்றல் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. மொத்தத்தில் இக்கலை நிகழ்ச்சிகள் பல்சுவையும் ஒருங்கமைந்த நல்விருந்தாக அனைவருக்கும் பெருவிருந்தாக அமைந்ததென்றால் மிகையாகாது.

எம் தமிழ் மக்கள் எங்கு சென்று வாழ்ந்தாலும் எந்த நிலையிலும் தம் நிலை மாறார் என்பதனை எமக்கு நினைவூட்டுவனவாக இந்த நிகழ்வுகள் அமைந்துள்ளன. ஆம் பேச்சிலும் மூச்சிலும் தமிழையே ஆதாரமாய்க் கொண்டு உயிரிலும் மேலாம் மொழியால் இணைந்த எம்மினம் உலகம் உள்ளளவும் தமிழ் வாழ வழிசெய்யும் என்பதே உண்மை.

• • •

## திருக்கோணேஸ் ... தொடர்ச்சி ...

ஆண்டிலும் மூன்றாவது கடல் கோள் கி. மு.306 லும் ஏற்பட்டதென சூழல் ஆய்வாளர் குறிப்பிட்டு, முதலாவது கடல் கோள் காரணமாக இலங்கை, இந்தியக்கண்டத்திலிருந்து பிரிந்தது என்றும் மூன்றாவது கடல்கோள் காரணமாக இலங்கைக்கு பேரழிவு ஏற்பட்டது என்றும் கூறியுள்ளனர்.

டௌறு என்ற ஆய்வாளர் கருத்துப்படி மூன்றாவது கடல் கோள் காரணமாகப் புகழ் பெற்ற ஆலயமொன்று அழிந்திருப்பதாகவும், அதுவே கோணேஷ்வரம் என்றும் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாகவே தற்போது பூஜை நடைபெறும் மலைப்பாறைக்கு கீழ் தொன்மையான ஆலயத்தின் எச்சங்கள் காணப்படுவதாக குறிப்பிடுவர்.

அழிந்து போன ஆலயத்தை பல்லவர் கால மன்னர்களோ அன்றி சோழர்கள் இலங்கையைக் கைப்பற்றி ஆண்ட காலத்திலோ அழிந்துபோன ஆலயம் புனரமைக்கப்பட்டு, கற்கோயில் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருக்கலாமெனக் கருதப்படுகிறது. இது தொடர்பாகவே குளக்கோட்டன் என்ற மன்னன் இவ்வாலயத்துக்கான திருப்பணியை செய்தான் எவும் அவனைத் தொடர்ந்து கஜ பாகு மன்னன் புனரமைப்பு வேலைகளைச் செய்தான் எனவும் பல வரலாற்றுத்தகவல்கள் தெரிவிக்கின்றன. எனவேதான் போர்த்துக்கீசர் ஆலயத்தை இடிப்பதற்கு முன் 1624 பழமையான ஆலயமொன்று கடல் கோளினால் அழிந்திருக்கிறது. அழிந்ததன் பின் மூன்று கோயில்கள் நிர்மாணிக்கட்டுள்ளன. மலையடிவாரம் மலை உச்சி மலை நடுப்பகுதி. இம் மூன்று கோயில்களும் கி முன் 3000 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டிருக்கலாமென நம்பப்படுகிறது. இதை குளக்கோட்டன் என்று கூறப்படும் மன்னன் திருப்பணி செய்ததாகவும் இதையே போர்த்துக் கேயர் இடித்திருக்கலாமெனவும் வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கோணேஷ்வரத்துக்கும் இலங்கை வேந்தன் இராவணன் சோழ மன்னன் குளக்கோட்டன் கஜபாகு மன்னன் திருஞான சம்பந்தர் ஏனைய நாயன்மார்கள் என்போருக்குமிடையேயுள்ள தொடர்புபற்றிக் கூறும் புராணங்களில் முக்கியமானதாக காணப்படுவது தெட்ஷண கைலாச புராணமாகும். இராச குருவான பண்டிதராசர் என்பவரின் வேண்டுகோளுக்கு இணங்க மகா வித்துவான் சிங்கை செகராச சேகரன் இதைப் பாடினார் என பேராசிரியர் பத்மநாதன் குறிப்பிடுகிறார்.

இராவணன் தனது தாயாரின் ஆசையை நிறைவேற்ற லிங்கம் ஒன்றைப் பெறுவதற்காக திருக்கோணேஷப் பெருமானிடம் வருகிறான், கடும் தவம் இருக்கிறான் எம் பெருமான் காட்சி தரவில்லை கடுங் கோபங் கொண்ட தசக்கரீவன் மலையை அசைக்க முயற்சிக்கிறான். முடியவில்லைதன்னிடமுள்ளசந்திரகாசம்என்னும் வாளினால் வெட்டினான். அதுவே இன்றுவரை இராவணன் வெட்டு என அழைக்கப்படுகிறது. தனது உடலை வருத்தி சாம கீதம் பாடினான். இரக்கம்கொண்டசிவன்காட்சிஅளித்துலிங்கத்தை அளித்தது கண்டு விஷ்ணுபகவான் இவன் இந்த இலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து விட்டால், உலகில் இவனை வெல்ல யாராலும் முடியாது எனப் பொறாமை கொண்டு இராவணனின் தாயார் இறந்து விட்டதாக பொய் சொல்லி லிங்கத்தை சூழ்ச்சி செய்து கவர்ந்ததாகவும் தாயாரின் ஈமக் கிரிகைகளைச் செய்யக் கிழத் தோற்றத்தில் வந்த விஷ்ணுபகவானை வேண்ட, கன்னியா வெந்நீரூற்றுக்களை பகவான் ஆக்கியதாகவும் புராணங்கள் இயம்புகின்றன.

கோணேஷ்வரத்தின் மான்மியங்களை கூறுவதில் தலைசிறந்த புராணமாக காணப்படுவது கேணேஷர் கல் வெட்டு கவி ராஜவரோதயன் என்னும் பல்லவரால் பாடப்பட்ட இந்நூல் குளக்கோட்ட மன்னன் கேணேஷ்வரத்தில் நிறைவேற்றிய திருப்பணிகளையும் அம்மன்னன் திட்டம் பண்ணிய நியமங்களையும் தீர்க்க தரிசனங்களையும் உள்ளடக்கியது. கோணேஷர் ஆலயத்துக்கு குளக்கோட்ட மன்னன் புரிந்த திருப்பணிகள் கயபாகு மன்னன் ஆலயத்துக்குச் செய்த திருப்பணிகள் ஆகியவற்றை எடுத்துக் கூறுகிறது.

கோணேஷர் கல் வெட்டில் கூறப்பட்ட செய்திப் படி மனு நீதி கண்ட சோழன் மரபில் வந்த வரராமதேவன் என்னும் மன்னனுடைய மகனான குளக்கோட்டன் ஆலயத் திருப்பணியை செய்தது மட்டுமன்றி நிலபுலங்களைத்தானம் பண்ணியமை கந்தளாய்க்குளத்தை நிர் மாணித்தமை குடி மக்களை குடியேற்றியமை போன்ற பல்வேறு கைங்கரியங்களை ஆற்றினான் என கோணேஷர் கல் வெட்டு கூறுகிறது.

இத்தகைய புகழ் பூத்த ஆலயத்தை 1624 ஆம் ஆண்டளவில் போர்த்துக்கீசர் திருகோணமலையை கைப்பற்றியதோடு ஆலயத்தின் அருட் சிறப்பையும் திரவியங்களையும் கண்டு பொறாமை கொண்ட போர்த்துக்கீச தளபதி டி சில்வா என்பவன் 1620 ஆண்டளவில் ஆலயத்தின் வரைபடங்களை வரைந்து திட்ட மிட்ட முறையில் 1624 ஆம் ஆண்டு சித்திரை மாதமளவில் தனது படையினரை பூசகர் போல் வேடம் தரிக்கப்பண்ணி ஆலயத்துக்குள் நுழைந்து தேவலோகம் போல் காட்சியளித்த ஆலயத்தைத் துவம்ஷம் செய்தான் செல்வங்களை கொள்ளை அடித்தான், ஆலயக் கற்களைக் கொண்டு பிரட்டிக்கோட்டையை அமைத்தான், ஆயிரக்கணக்கான விக்கிரகங்கள் உடைத்தெறியப்பட்டன. ஏழு அடுக்குக்களை உடைய தங்கரதம் எரித்து சாம்பல் ஆக்கப்பட்டது

ஆலயத்தின் பூசகர்கள் தொண்டர்கள் வரிப்பத்தார் தான தத்தார் முதன்மைக்குருக்கள் ஆகியோர் நாலா திசையும் ஓடினார்கள். அவர்களுடன் ஆலயக் கடமை புரிந்த வன்னியர் ஆட்சியின் பங்குதாரர்கள் படையாண்ட குடிகள் முத்து சங்கு எடுப்போர் என ஓடியவர்கள் அங்கிருந்த விக்கிரகங்களை காப்பாற்ற எண்ணி தம் கைக் கெட்டிய விக்கிரகங்களை எடுத்துக் கொண்டு சென்று ஆலயத்துக்கு அருகிலுள்ள கிராமங்களான 10 ஆம் குறிச்சி சின்ன படுக்கை வீரநகர் போன்ற இடங்களில் பாதுகாப்பாக புதைத்துவிட்டு சில விக்கிரகங்களை தம்பலகாமம் எடுத்துக் கொண்டு ஓடினார்கள். இவர்கள் ஓடியதை சாதகமாக பயன் படுத்திய போர்த்துக்கேயப் படைகள் அழகிய வடிவமைக்கப்பட்ட சிறப்ப கற்களை உடைத் தெடுத்து கலைச்செழுகை கொண்ட கற்களைக் கொண்டு பிரமாண்ட கோட்டையை கட்டினார்கள்.

சுமார் 325 வருடங்கள் ஆலயம் அழிந்து போய்க்கிடந்த நிலையில், 1939 ஆம் ஆண்டு திருகோணமலை கடற்படை தளத்தில் கடமையாற்றிய டாக்டர் பாலேந்திரா போர்துக்கீசர் இடித்த ஆலயத்தை அடையாளம் கண்டு பிடித்த போதும், ஆலயத்தைப் புனரமைக்க முடியாத காரணத்தினால்1952ஆம்ஆண்டு போர்த்துக்கல்லில் உள்ள அஜூடா காட்சியகத்துக்குச் சென்று, போர்த்துக்கீசர் அழிப்பதற்கு முன் இருந்த ஆலயத்தின் படத்தை எடுத்துவந்தார். இதன் பின் 1950 ஆம் ஆண்டுக்குப்பின் ஆலய புனருத்தாரணப் பணிகள் தொடங்கப்பட்டன. 1952 ஆம் ஆண்டு சுவாமி மலையில் தற்காலிக ஆலயம் அமைக் கப்பட்டு அங்கு விக்கிரகங்கள் பிரதிஸ்டை செய்யப்பட்டன. இதன்பின் ஆலய நிர்மாண வேலைகள் தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து பல்வேறு இடங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்ட விக்கிரகங்கள் கண்டு எடுக்கப்பட்டு ஆலய புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டு 1963 ஆம் ஆண்டு ஆனி 30 ஆம் திகதி முதலாவது கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

• • •

## அமெரிக்கா ... தொடர்ச்சி ...

100 பில்லியன் டொலர்களை வழங்கும் அறிவிப்பை மேற்கொண்டார்.

தொலைத் தொடர்பு சாதனங்கள், சூரிய ஒளி மின்கலங்கள், மடிக்கணினிகள், மின் கலங்கள் போன்றவற்றை உருவாக்குவதில் பின் பற்றப்பட்ட “வேகமாகப் பின்பற்றும் உத்தியை” இங்கும் சீனா பின்பற்றக்கூடும் என்ற அச்சம் அமெரிக்க நிறுவனங்கள் மத்தியில் தற்போது ஏற்பட்டிருக்கிறது. இதன் பொருள் என்னவென்றால், ஒரு நிறுவனம் தொழில்நுட்ப ரீதியாக ஒரு புதிய சாதனத்தை உருவாக்கும் போது மிக விரைவாக அந்தப் பொருளை இன்னொரு நிறுவனம் உற்பத்தி செய்வதைக் குறிக்கும்.

தொழில்நுட்பத்துறை தொடர்பாக ஜோ பைடன் உருவாக்கிய கொள்கைகளே டீப்சீக் செயலியின் உருவாக்கத்துக்கான காரணம் என்று ட்ரம்ப் குற்றம் சுமத்தினார்.

அமெரிக்கத் தொழில்நுட்பத்தை ஏனைய நாடுகள் இலகுவில் பயன்படுத்துவதைக் கட்டுப் படுத்தத் தவறியதன் காரணமாகவே சீனாவும் ஏனைய போட்டியாளர்களும் இத்துறையில் முன்னேறிச்செல்ல வழிவகுத்திருக்கிறது என்று விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் போன்ற துறைகளுக்கான வெள்ளை மாளிகையின் பேச்சாளரான விக்ரோறியா லாசிவிற்றா (Victoria LaCivita) கருத்துத் தெரிவித்திருந்தார்.

தனது பதவிக்காலத்தில் ஓப்பிண் ஏஐ, கூகிள், மற்றும் செயற்கை நுண்ணறிவுத் துறையில் முன்னணி வகிக்கும் நிறுவனங்களை அரவணைத்த ஜோ பைடன், உயர் வலுக்கொண்ட செயற்கை நுண்ணறிவில் பயன்படுத்தப்படும் சிப்களுக்கு ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளை விதித்திருந்தார். செயற்கை நுண்ணறிவுத் துறையில் பயன்படுத்தப்படும் பொருட்கள் மிகவும் விலையுயர்ந்தவையாக இருப்பதன் காரணத்தால் இதனைப் பயன்படுத்தி, சீனாவைக் கட்டுப் படுத்தலாம் என பைடன் எண்ணியிருந்தார். ஆனால் இவ்வாறான கட்டுப்பாடுகளையும் மீறி சீனா எடுக்கும் முயற்சிகளை ஒரு கட்டுக்கோப்புக்குள் வைத்திருப்பதற்காக கடந்த மாதம் பைடன் தனது இறுதியான கட்டுப்பாடுகளை அறிவித்திருந்தார்.

செயற்கை நுண்ணறிவுச் சாதனங்களை உருவாக்குவதற்கு அதிநவீன வன்பொருட்கள் அவசியமில்லை என்பதை டீப்சீக்கின் அண்மைய வெற்றி பறைசாற்றுகிறது.

டீப்சீக்கின் அணுகுமுறையை ஏனைய நிறுவனங்களும் பின்பற்றுவதைத் தடுப்பதற்கு ட்ரம்ப் நிர்வாகம் எவ்வாறான நடைமுறைகளை மேற்கொள்ளப் போகின்றது என்பது இன்னும் தெளிவாகவில்லை.

சீன கம்யூனிசக் கட்சியின் விடயங்களைக் கையாள்வதற்காக உருவாக்கப்பட்ட அமெரிக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு, டீப்சீக்கின் உட்கட்டமைப்பு தொடர்பான தொழில்நுட்பங்களில் கடுமையான ஏற்றுமதிக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தது.

டீப்சீக் போன்றவற்றினால் எமது தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுவதை நாம் அனுமதிக்க முடியாது. அதே வேளை செயற்கை நுண்ணறிவுத் துறையில் முன்னேறிச் செல்ல எமது தொழில்நுட்பத்தையே அவர்கள் பயன்படுத்துவதையும் நாம் அனுமதிக்க முடியாது என்று அந்த தெரிவுக்குழு மேலும் தெரிவித்தது.

**நன்றி: *The Washington Post***

## போதைப்பொரு ... தொடர்ச்சி ...

சமான கண்ணோட்டங்கள் இருக்கின்றது. ஆகவே உண்மையிலேயே இந்த பல்கலைக்கழகங்களுக்குள்ளே இடம்பெறுகின்ற இவ்வாறான விடயங்கள் மிகவும் கவலைக்குரிய ஒரு விடயம். இந்த விடயத்தால் கலைப்பீட மாணவர்கள் பலரும் பாதிக்கப்பட்டதாக மாணவர் ஒன்றியம் குறிப்பிடுகின்றது. இதே சூழலிலே அந்த மாணவர்கள் பாதிக்கப்படுகின்ற காரணத்தைக் காட்டி ஒரு குறிப்பிட்ட மாணவர்களை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் புறந்தள்ளுகின்ற செயற்பாட்டையும் மாணவர் ஒன்றியம் தவிர்த்து அனைத்து மாணவர்களுடைய சக்தியையும் திரட்டி மாணவர்களுக்குள்ளே ஒரு இணக்கப்பாட்டை கொண்டு வர வேண்டும்.

கலைப்பீட மாணவர் ஒன்றியம் சார்ந்த ஊடக சந்திப்பில், காலைப்பொழுதிலே பெண் மாணவிகள் அதாவது பெண் கோதரிகளுடைய சில விடயங்களை காட்சிப்படுத்துவதை நாங்கள் சில தினங்களிலேயே அவதானித்திருந்தோம் என்று கூறியிருந்தார்கள்.

உண்மையிலேயே அந்த விடயங்களை அவதானிக்கின்ற போது அந்த மாணவர் ஒன்றியம் மாணவருடைய பிரதிநிதித்துவம் அங்கு என்ன கடமையை ஆற்ற வேண்டும் என்பதை சிந்தித்து செயல்பட்டு இருக்க வேண்டும். உண்மையிலே இந்த விடயங்களை எல்லாம் தற்போது எங்களுக்கு அனுபவ ரீதியிலே சில விடயங்களை பார்த்து வந்து மாணவர்கள் பலவிதமான சூழலிலே இருந்து பலவிதமான நிலைப்பாடுகளிலே பல்கலைக்கழகத்துக்குள்ளே வந்திருப்பார்கள். இந்த மாணவர்கள் அனைவருக்கும் வித்தியாசமான பிரச்சினைகளும் முகங்களும் இருக்கும். இவர்களை எவ்வாறு சரியான விதத்திலே கையாள்வது என்ற திறனை பெற்றுக் கொள்வதற்கு சில காலங்கள் எடுக்கும். அந்த தன்மையை விளங்கி பல்கலைக்கழகத்தில் இருக்கிற அனைத்து மாணவர்களையும் சரியான விதத்திலே கையாளக்கூடிய ஒரு சக்தியாகத்தான் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் திகழ வேண்டும் என்றதும் எங்களுடைய ஒரு அனுபவ ரீதியான ஒரு கருத்து.

### பல்கலைக்கழகத்தில் இந்த போதை பொருள் பிரச்சினையால் கலைப் பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் அவர்கள் இராஜினாமா செய்ததாக அறிகின்றோம் அவருடைய பதவி விலகலுக்கு என்ன காரணம்?

இந்த போதை பொருள் பாவனையோடு சம்பந்தப் பட்ட மாணவர்களை பேராசிரியர் ரகு அவர்களும் அங்கு இருந்த பாதுகாவலர்களும் ஒழுக்காற்று அதிகாரிகளுமாக சேர்ந்து அந்த மாணவர்களை இனங்கண்டு மாணவர்களோடு இந்த விடயத்தை கையாள முற்பட்டபோது மாணவர்கள் பேராசிரியரை அவமதித்து நடந்து கொண்டதாகவும் அது பொதுவெளிக்கு கொண்டு சென்றதாகவும் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினால் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது உண்மையிலேயே மிகவும் வருந்தத்தக்க ஒரு விடயம். எங்களுடைய இளைஞர்கள் மத்தியிலே ஆசிரியர்களை தகுந்த விதத்தில் அவர்களுக்குரிய மரியாதையை அளிக்க நாங்கள் கற்றுக்கொள்ளவில்லை என்பது மிகவும் வருந்தத் தக்கது. அவர்களுக்குரிய மரியாதையை கொடுக்கும் போதுதான் அவர்களிடமிருந்து நாங்கள் பெற வேண்டியதை சரியான விதத்திலே பெற்றுக்கொள்ள முடியும்.

அவர்களிடம் பெற்றுத்தான் இந்த சமுதாயத்திலே நாங்கள் ஒரு ஆக்க பூர்வமான நபர்களாக வெளியே வருகின்றோம்.

பேராசிரியர் ரகுராம் அவர்கள் அவமதிக்கப்பட்டமை மிகவும் கவலைக்குரியதாக இருந்த போதும் இந்த விடயத்தை விசாரணைகள் மூலமாக ஒழுக்காற்றுக் குழு மாணவர்களுக்கு தண்டனை ஒன்றை வழங்க தீர்மானித்து, அது பேரவை ஊடாக நிறைவேற்றுவதற்கு எடுத்துச் சென்றபோது, மாணவர்கள் அந்த விடயத்திற்கு எதிராக உணவு தவிர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருக்கின்றார்கள்.

மாணவர்களுக்காகவும் சமுதாயத்துக்காகவும் உருவாக்கப்பட்டது தான் பல்கலைக்கழகங்கள் அந்த வகையிலே அந்த சிந்தனையை வைத்து தான் பல்கலைக்கழகமும் நிச்சயமாக செயல்படும்.

ஆனால் பல்கலைக்கழகமானது இந்த சூழலிலே அதாவது தமிழ் மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையை உண்மையிலேயே புத்தி அறிவு சார்ந்த சமுதாயமாக திரண்டு இருக்கின்ற யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தவறுகின்றது.

பேராசிரியர் ரகுராம் அவர்கள் ஈழத் தமிழ் மக்களுக்கு ஒரு பெரிய ஒரு பணியை ஆற்றுகின்ற ஒரு நபராக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலே திகழ்ந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று பல்கலைக்கழகங்கள் மாத்திரமல்ல பாடசாலைகள் ரீதியிலேயே நாங்கள் போய் பார்க்கும்போது இவ்வாறான விடயத்தை தான் எங்களால் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

இந்த மாணவர்களை இளையவர்களை கட்டமைக்க தொடர்ச்சியாக தவறி வருகின்றமை தான் பல்கலைக்கழகத்திலேயும் அது பிரதிபலிக்கின்றது.

### போதை பயன்பாடு,விற்பனை தொடர்பில் இலங்கை அரசும் காவல்துறையும் என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள்?

நிச்சயமாக ஈழத் தமிழ் மக்களாக எங்களை நாங்கள் மிகவும் பலமான ஒரு அமைப்பாக 2009க்கு முன் கட்டமைத்து இருக்கின்றோம். இதன் பின்னர் எங்களுக்கான ஒரு உறுதியான முன்னகர்த்தக்கூடிய கட்டமைப்பு இல்லாத காரணத்தினால்தான் தமிழர்களை பலவீனப்படுத்துவதோடு தமிழர்களுடைய இருப்பை கேள்விக்குறியாக்க முற்படுகின்றனர்.

அத்தோடு இந்த போதை பொருள்களை எங்களுடைய சமுதாயத்திலே கொண்டு வருகின்றார்கள். தற்போது இருக்கிற சூழலிலே நாங்கள் செய்ய வேண்டியது எங்கள் மீது தடைகளை கொண்டு வரலாம். எங்களிலே பிரச்சினைகளை உருவாக்கலாம். ஆனால் அதற்கு எதிர்வினை ஆற்றக்கூடிய பொறிமுறைகளை நாங்கள் உருவாக்க வேண்டும். அதை தொடர்ச்சியாக நாங்கள் தவற விட்டு வருகின்றோம்.

மேலும் ஈழத் தமிழ் மக்கள் மத்தியிலே தமிழ் தேசிய அரசியல் தலைமைகளிடமும் இந்த போதை பொருள் சார்ந்து மிகவும் பேசுபொருளாக இருந்தது. ஆகவே இன்றைக்கு இலங்கை அரசாங் கத்தோடு சேர்ந்து நாங்கள் தெரிவு செய்த எங்களுடைய தலைமைகளும் எங்கள் இனத்தினுடைய இருப்பை பாதிக்கக்கூடிய போதை பொருட்களை எங்களது சமுதாயத்திற்கு முன்னிலைப்படுத்தி வருகின்றது என்ற ஒரு பொருள் பாராளுமன்ற தேர்தல் காலத்திலே முக்கிய பேசுபொருளாக இருந்தது.

இதனுடைய தொடர்ச்சியாக இந்த போதை பொருளை கையாள வேண்டியது இலங்கை அரசாங்கத்திடம் நாங்கள்எதிர்பார்த்திருக்க முடியாது. இலங்கை அரசாங்கத்தினுடைய நோக்கங்கள் எவ்வாறு இருக்கும். எங்களுடைய இனம் சார்ந்த அவர்களுடைய பயணம் எப்படி இருக்கும் என்பதை நாங்கள் நன்கு அறிவோம். ஆகவே காவல்துறையினர் போதை பொருட்களை

இல்லாது ஒழிப்பார்கள். முன்மாதிரியாக எங்களுடைய சமுதாயத்தை கட்டமைப்பார்கள் என்ற எதிர்பார்ப்பை தமிழ் மக்கள் எதிர்பார்த்திருக்கக்கூடாது

• • •

## ஆபிரிக்க பொரு ... தொடர்ச்சி ...

நாடுகள் மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளதாரக் கூட்டமைப்பில் இருந்து உத்தியோக பூர்வமாக வெளியேறியுள்ளதாக 15 ஆபிரிக்க நாடுகளைக் கொண்ட அந்த கூட்டமைப்பு கடந்த புதன்கிழமை(29) தெரிவித்துள்ளது.

எனினும் விலகிய 3 நாடுகளும் மீண் டும் இணைந்துகொள்வதற்கானகதவுகள்எப்போதும் திறந்துள்ளதாகவும், அவ்வாறு இணைந்தால் நுழைவு அனுமதியின்றிய பயணங்கள் மற்றும் வர்த்தக நன்மைகளை பெறமுடியும் என அந்த அமைப்பு தனது அறிக் கையில் தெரிவித்துள்ளது.

எனினும் பிரான்ஸின் உதவியுடன் நைகர் மீது படை நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள 400 மில்லியன் மக்கள் தொகையை கொண்ட இந்த கூட்டமைப்பு முற்படுவதாகவும், எனவே தான் தாம் அதில் இருந்து வெளியேறியதாகவும் வெளியேறிய நாடுகள் குற்றம் சுமத்தியுள்ளன.

நைகர் நாட்டில் 2023 ஆம் ஆண்டு ஜுலையில் ஏற்பட்ட இராணுவப் புரட்சி மூலம் அந்த நாட்டில் ஒரு ஆட்சிமாற்றம் ஏற்பட்டிருந்தது. அதன் பின்னர் அங்கிருந்த பிரான்ஸ் படையினரை நைகரின் புதிய அரசு வெளியேற்றியிருந்தது. இந்த நாடுகளுக்கு ரஸ்யா உதவிகளை மேற்கொண்டுவருவது இங்கு குறிப் பிடத்தக்கது.

## அமெரிக்காவின் ... தொடர்ச்சி ...

விகித உதவியை மேற்குலக நாடுகளில் பெற்றே இயங்கி வருகின்றன.

தற்போது அமெரிக்காவின் புதிய அரச தலைவர் டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவின் அபிவிருத்தி நிறுவனத்தால் வெளிநாடுகளுக்கு வழங்கப்படும் உதவியை 90 நாட்களுக்கு நிறுத்தியுள்ளார். அது இந்த ஊடகங்களை கடுமையாக பாதிக்கலாம். பல ஊடகங் கள் தமது நிகழ்ச்சிகளை நிறுத்தியுள்ளன. அவர்கள் அவசர நிதி உதவியை தற்போது கோரிநிற்கின்றன.

இதுவரையில் அமெரிக்கா தான் உக்ரைனின் ஊடகங்களை இயக்கி வந்திருந்தது. ஆனால் தற்போது உக்ரைன் ஐரோப்பிய ஒன்றியத்திடம் உதவியை எதிர்பார்த்து நிற்கின்றது. ஐரோப்பிய ஒன்றியம் நிதி உதவி வழங்கினால் மட்டுமே ஊடகங்கள் இயங்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யுஎஸ் அமைப்பினால் 2023 ஆம் ஆண்டு வெளிநாடுகளுக்கு வழங்கப்பட்ட 60 பில்லியன் டொலர்கள் உதவியில் பெருமளவானவை உக்ரைனுக்கே வழங்கப்பட்டிருந்தது. உக்ரைனின் ஊடகத்துறைக்கு அது 145 மில்லியன் டொலர்களை வழங்கியிருந்தது.

## இனவாதிகளுக்கு ... தொடர்ச்சி ...

வடக்கின் காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் ஆகிய பிரதேசங்களில் புதிய கைத்தொழிற்பேட்டைகளை நிறுவ நடவடிக்கை எடுத்துள்ளோம். வெளிநாட்டில் உள்ள புலம்பெயர்ந்த இலங்கையர்களுக்கு இங்கு முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுக்கிறோம். தொழில் வாய்ப்பு இல்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு இங்கு தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்போம்.

அதேபோன்று காணி பிரச்சினை உள்ளது. மக்களின் காணிகள் மக்களிடத்திலேயே வழங்கப்பட வேண்டும். எனவே, காணி பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுப்போம்.

எமது மீனவர்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். இந்த பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்க நாம் தயாராக இருக்கிறோம். மீனவர் பிரச்சினை தொடர்பில் நாம் இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடினோம். இலங்கை கடற்படைக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பணிப்புரை விடுத்துள்ளோம். கட்டம் கட்டமாக இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்போம்’ என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**இலங்கையின் ... தொடர்ச்சி ...**

பாதுகாப்பதற்கான கல்லணைகள் அமைத்தல்:

பருத்தித்துறை மூர்க்கம், முனை, கொட்டடி கடற்கரை, சுப்பர்மடம், இன்பர்சிட்டி கடற்கரை, சக்கோட்டை கடற்கரை, திக்கம் கடற்கரை, கொத்தியால் கடற்கரை, றேவடி கடற்கரை, ஆதிகோவிலடி கடற்கரை, தொண்டைமானாறு கடற்கரை, பலாலி கடற்கரை, சேந்தான்குளம் கடற்கரை, மாதகல் கடற்கரை ஆகிய இடங்களில் படகுகள் தரித்து நிற்கும் இடங்களில் படகுகளைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்பு கல்லணைகள் அமைக்கப்பட வேண்டும்.

படகுகள் நுழையும் பகுதிகளை ஆழமாக்குதல்:

மூர்க்கம் தொடக்கம் மாதகல் வரை படகுகள் தொழிலுக்காக இறக்கப்படும் நுழைவு வான்கள் நீண்டகாலமாக ஆழப்படுத்தப்படாமையினால் படகுகள் சேதமடைகின்றன. படகுகள் சேதமடைவதனை தடுக்கும் வகையில் குறித்த இடங்கள் உடனடியாக ஆழப்படுத்தப்படல் வேண்டும்.

கொத்தியால் கடற்கரையில் படகுகள் தரிப்பிடத்தில் அகழப்பட்ட மண்ணை அப்புறப்படுத்த நடவடிகை எடுத்தல்:

வல்வெட்டித்துறை கிழக்கு கிராமிய கடற்தொழில் அமைப்பினருக்குச் சொந்தமான படகுகள் தரித்து நிற்கும் பகுதியிலிருந்து அகழப்பட்ட மண் கடற்கரையிலேயே குவிக்கப்பட்டுள்ளது. அந்த மண் மீண்டும் மீண்டும் இறங்குதுறைக்குச் சென்று படகுகள் நிறுத்தும் பகுதியை மூடுவதனால் படகுகளை நிறுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு கொட்டப்பட்டுள்ள மண்ணை அகற்றுவதற்கான அனுமதியை சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் இன்னமும் வழங்கவில்லை. எனவே, அப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ள மண்ணை அண்மையிலுள்ள பொது அமைப்புக்களது பயன்பாட்டுக்காக எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

6. இந்திய மீனவர்களால் வலைகள், படகுகள், சேதமாக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும்.

7. கனமழை, வெள்ளப்பெருக்கு காரணமாக ஏற்பட்ட விவசாய அழிவுகளுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும்.

8. யாழ். குடாநாட்டில் சொந்த காணிகள் மற்றும் வீடுகள் இல்லாதவர்களுக்கு காணிகள் வழங்கவும் வீடுகள் கட்டிக்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வீட்டுத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி போதாமல் உள்ளது, அத்தொகை அதிகரிக்கப்பட வேண்டும்.

9. தையிட்டியில் தனியார் காணியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரை கட்டுமானம் அகற்றப்பட வேண்டும். தனியார் காணிகள் அனைத்தும் பொது மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

10. மயிலிட்டியில் விடுவிக்கப்படாத மூன்று கிராம சேவையாளர் பிரிவுகள் உட்பட யாழ். குடாநாட்டில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள தனியார் காணிகள் மற்றும் பொதுக் காணிகள் அனைத்தும் விடுவிக்கப்பட வேண்டும். வசாவிளான் சந்தியிலிருந்து பலாலி சந்தி வரையான வீதி பொதுமக்கள் பயன்பாட்டுக்காக திறக்கப்பட வேண்டும்.

11. யாழ். நகர அபிவிருத்திக்கு கடந்த 2017ஆம் ஆண்டில் உலக வங்கி வழங்கிய நிதி உதவியில் வடிகாலமைப்பில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பான விரிவான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

12. யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் ஒவ்வொன்றுக்கும் தகுதிபெற்ற திட்டமிடலாளருக்குரிய ஆளணி உருவாக்கப்பட்டு, நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம் மாவட்டம் முழுமைக்குமான பிரதான வடிகாலமைப்பு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

13. வீதி விளக்குகள் பொருத்துவது தொடர்பில் மின்சார சபைக்கும் பிரதேச சபைகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் உடனடியாக தீர்த்து வைக்கப்பட வேண்டும்.

14. நெடுந்தீவுக்கான கடல்வழிப் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படும் படகுச் சேவைகள் கடற்படையினரிடமிருந்து மீளப்பெற்று வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட வேண்டும்.

15. வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இயக்கப்பட்டுவந்த குறிகாட்டுவான் - நைனாதீவுக்கான போக்குவரத்துப் பாதை பழுதடைந்த நிலையில் ஒரு வருடமாகத் திருத்தப்படாமல் உள்ளது. அது உடனடியாக திருத்தப்பட வேண்டும்.

நைனாதீவு தெற்குப் பகுதியில் அமைந்துள்ள இறங்குதுறை பழுதடைந்த நிலையில் நீண்டகாலமாக அங்கு போக்குவரத்து இடம்பெறுவதில்லை. அந்த இறங்குதுறை திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

16. குறிகாட்டுவான் இறங்குதுறை உடனடியாக விஸ்தரிக்கப்பட வேண்டும்.

குறிகாட்டுவான் இறங்குதுறையிலிருந்து புங்குடுதீவு நோக்கிச் செல்லும் வீதி சுமார் 5 கிலோ மீற்றர் குன்றுங்குழியுமாக உள்ளது. உடனடியாக திருத்தப்பட வேண்டும்.

17. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு நிரந்தர மாகாண கல்விப் பணிப்பாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

18. வடக்கு மாகாணத்தில் SLEAS அதிகாரிகளுக்கான பற்றாக்குறை 50 வீதத்துக்கு மேல் காணப்படுகிறது. இவ்வெற்றிடங்களை உடனடியாக நிரப்பும் வகையில் பிரமாணங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

19. வடக்கு மாகாணத்தில் 3555 ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன. அவற்றை நிவர்த்தி செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

20. வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான ஆளணி வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும்

• • •




**பெருகிக்கிட ... தொடர்ச்சி ...**

பெருகிக்கிடக்கின்ற இந்த போதைப் பொருட்களை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியிருக்கின்றோம்” என்றார்.

**ஈழத்தமிழினத் ... தொடர்ச்சி ...**

பார்க்கலாம். இவ்வாறு ஏமாற்றமடைந்த நிலையில் 1976, மே, 14ல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை தந்தை செல்வா தமிழர் விடுதலை கூட்டணி ஊடாக மேற்கொண்டதும் அதனூடாக 36, விடுதலை இளைஞர்கள் இயக்கம் ஆரம்பமாகி 1987, யூலை, 29ல் இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு பின்னர் 2009, மே 18, வரை விடுதலைப்புலிகள் தியாக போர் நடைபெற்று மௌனமானதும் வரலாறு. அதன்பின்னர் தற்போது 16, வருடங்களாக தமிழ்தேசிய தலைமை அற்ற நிலையில் ஈழ உரிமை அரசியல் இராஜதந்திர ரீதியாக சென்றுள்ளது.

தந்தை செல்வா 1949, டிசம்பர், 18ல் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியியை ஆரம்பித்து சமஷ்டி தீர்வை கேட்டு அகிம்சை போராட்டம் தொடங்கியவர், 1976, மே, 14ல் தமிழர் விடுதலை கூட்டணியை ஆரம்பித்து தமிழீழம் கேட்டு தீர்மானத்தை எடுத்தே 1977, ஏப்ரல், 26ல் மரணித்தார். இதில் பார்க்க வேண்டியது தந்தை செல்வா என்ற தலைவர் இரண்டு தீர்மானங்களை நிறைவேற்றினார் ஒன்று சமஷ்டி தீர்வு, அடுத்தது தமிழீழத் தனியரசுத் தீர்வு. ஆனால் இரண்டும் இரண்டு வெவ்வேறு கட்சிகள் என்பதே உண்மை. இதில் புலம்பெயர் அமைப்புகளின் பங்களிப்பு, மற்றும் தமிழ்தேசிய அரசியல் கட்சிகள் ஒரு நேர்கோட்டில் பயணிக்கவேண்டிய நிலையில் எதிர்வரும் 2025, பெப்ரவரி, 04ல் 77வது இலங்கை சுதந்திரதினத்தை வழமைபோன்று கரிநாளாக அனுஷ்டித்து சர்வதேசத்திற்கு மீண்டும் நிருபிக்க அணிதிரள்வது காலத்தின்தேவை.

• • •

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்


செஞ்சோலை - வள்ளிபுனம்



தேராவில்


தேராவில்


மூங்கிலாறு


புன்னை நீராவி பிள்ளையார்


பரந்தன் சந்தி